# அரசு ஊழியர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாத இதழ்
ஆசிரியர்: ஆ.செல்வம்
மே - 2020
தனிப்பிரதி 10.00







Scanned with CamScanner

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின்
# 37வது அமைப்பு தின கொடியேற்று விழா நிகழ்வுகள்






































Scanned with CamScanner

# அரசு ஊழியர்

மே 2020

மலர் : 41 இதழ் : 5

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : ஆ.செல்வம்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன், இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி

முகவரி : பழைய எண். 48

புதிய எண் 46, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

e-mail : arasuoozhiyar@gmail.com

அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ், 19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஆண்டுச் சந்தா : ரூ. 100 தனி இதழ் ரூ. 10


## சூடா ஒரு கோப்பை சூப்

### வாராய் மணிவிளக்கே!

தொழிலாளர் சாதனையைத்
தூக்கிக் கொடிபிடித்து
வாராய் மணிவிளக்கே
வந்திடுவாய் மே தினமே!
யுத்தஒலி கேட்கிறது!
ஊர்மிரட்ட எண்ணுபவர்
பித்தம் அணுகுண்டாய்
பேயாய் அலைகிறது!
ரத்தவெறிபிடித்த லாப
அரக்கர்களின் கத்தி
மனிதர் கழுத்தறுக்க நீள்கிறது!
நீல நெடுந்திரையாய்
நீள்கின்ற கைகளினால்
ஞாலத் தொழிலாளர்
நல்லரசைத் தோற்றுவிப்போம்!

- கவிஞர் தமிழ்ஒளி




# ஏழைகளுக்கான இந்தியா இறந்துவிட்டதா?

ஒரு நேர்கோட்டின் இரண்டு முனைகளை இப்போது நாம் கவனத்துடன் உற்றுநோக்க வேண்டியுள்ளது. ஒரு முனையில் கிட்டத்தட்ட 40 நாட்களாக பொதுமுடக்கத்துக்கு ஆளாக்கப்பட்ட ஒரு தேசத்தின் கோடிக்கணக்கான மக்கள் பாதி வயிறும், பசியும், பட்டினியுமாய் இந்த அரசாங்கம் நமக்கு ஏதாவது செய்துவிடாதா என்று உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு காத்துக்கிடக்கிறார்கள். அந்த நேர்கோட்டின் இன்னொரு முனையில் சில நூறு பெரும்பணக்காரர்கள் இந்தப் பொது முடக்கத்தின் காரணமாக தங்களின் தொழிலில் ஏற்பட்டுள்ள லாபக் குறைவு அல்லது நட்டத்துக்காக இந்திய அரசிடம் முறையிடுகிறார்கள். இங்கே பிரதமர் யாரை முதலில் கவனிக்க வேண்டும்? பாதி வயிறோடும் பாதி உயிரோடும் ஜீவமரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் கோடிக்கணக்கான மக்களையா? அல்லது லாபத்தில் குறைவு அல்லது தொழிலில் நட்டம் அடைந்து நிற்கும் சிலநூறு முதலாளிகளையா?

நீங்கள் நினைத்தது சரிதான். வாழ்வாதாரத்திற்காக போராடிக்கொண்டிருக்கும் மக்களைத்தான் அவர் முதலில் சந்திந்தார். அவர்களிடம் நீங்கள் கைதட்டுங்க என்று சொல்லிவிட்டு எதிர்முனையில் நின்றவர்களிடம் கைகுலுக்கினார். சில நிமிடங்களுக்குப் பிறகு கைகுலுக்கியவர்களைக் காணவில்லை. கைதட்டியவர்கள் நிமிடங்களை மணிகளாக்கி, வாரங்களாக்கி காத்திருந்தார்கள், இரண்டாவது முறையாவது பிரதமர் ஏதாவது நிவாரணம் அறிவிப்பார் என்று. இரண்டாவது முறை வந்த பிரதமர் விளக்கேற்றச் சொன்னார். விளக்கேற்றிவிட்டு பார்த்தால் எதிர்முனையில் தான் வெளிச்சம் தெரிந்தது. ஆனாலும் அவர்கள் நம்பிக்கையுடன் காத்திருந்தார்கள். தங்கள் பிரதமர் மூன்றாவது முறை வரும்போதாவது ஏதாவது கொண்டுவருவார் என்று. ஆனால் இம்முறை அவர் வரவில்லை. பொது முடக்க அறிவிப்பு மட்டும் வந்தது. கூடவே சில அறிவிப்புகளும் வந்தன.

மக்களின் கவனம் முழுக்க நோய் தொற்று மற்றும் பொது முடக்கத்தினால் ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்து திரும்பியிருக்கும் நிலையில் 922 கோடி ரூபாய் செலவில் நாடாளுமன்றக் கட்டிடத்தை புதிதாக கட்டுவதற்கான திட்டத்திற்கு சுற்றுச்சூழல்




Scanned with CamScanner

அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது. சுற்றுச் சூழலை பெருமளவு பாதிக்கக்கூடிய கட்டுமானப் பணிகள் மற்றும் சுரங்கத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் பல்வேறு குழுக்கள் இந்த நெருக்கடியான காலகட்டத்தில் பலமுறை வீடியோ கான்பரன்சிங் மூலம் ஆலோசனைகள் நடத்தி சர்ச்சைக்குரிய பல்வேறு திட்டங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. அருணாச்சல பிரதேசத்தில் 1150 ஹெக்டேர் பரப்பளவில் மழைக்காடுகளை அழித்து இட்டாலியன் ஹைட்ரோபவர் திட்டத்திற்கும், தெலுங்கானாவில் யுரேனிய சுரங்கத் திட்டத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மோடி தலைமையிலான அரசு, வங்கிகளில் கடன் வாங்கிவிட்டு திருப்பிச் செலுத்தாமல் தப்பியோடிய நீரவ் மோடி, மெகுல் கோக்சி, விஜய் மல்லய்யா போன்ற 50 தொழில் அதிபர்களின் ரூ.68,000 கோடி வங்கிக்கடன்களைத் தள்ளுபடி /தள்ளிவைப்பு செய்துள்ளது. இந்த 50 பேரும் கூழுக்கு அலைகிற அன்றாடங்காய்ச்சிகள் அல்ல. கும்பி வெடித்துச் சாகிற அளவுக்கு தேசத்தின் குறுக்கும் நெடுக்குமாக உள்ள நெடுஞ்சாலைகளில் அக்னி வெயில் என்றும் பாராமல் வெறும் காலில் நடந்து கொண்டிருக்கும் இடம்பெயர்ந்த தொழிலாளர்களும் அல்ல. பல தலைமுறைகளுக்குச் சொத்து குவித்து வெளி நாடுகளில் பதுங்கிக் கொண்டு உல்லாசமாக பொழுதைக் கழிப்பவர்கள். இத்தகைய மிக மோசமான குற்றவாளிகளுக்குத்தான் பாஜக அரசு கருணை காட்டியுள்ள அறிவிப்புகள்தான் அது.

கைகுலுக்கியவர்களுக்கு மேற்சொன்னபடி வெளிச்சம் பாய்ச்சிய மத்திய அரசு, கைதட்டியவர்களுக்கு செய்தது என்ன என்பதைப் பார்ப்போம். தொழிலாளர்களின் வேலை நேரத்தை 8 மணி நேரத்திலிருந்து 12 மணி நேரமாக மாற்ற ஆலோசனை நடத்துகிறது. ஏழை எளிய மக்களின் ரேஷனில் கைவைக்கத் திட்டமிடுகிறது. அரசு ஊழியர்களின் அகவிலைப்படியை 18 மாதங்களுக்கு நிறுத்தி வைத்து உத்தரவிடுகிறது. இதற்கு ஒத்து ஊதுவதுபோல் தமிழக அரசு, அரசு ஊழியர்கள் மீது தாக்குதல் தொடுத்து அவர்கள் தாங்கள் ஈட்டிய விடுப்பை ஒப்படைவு செய்ய ஒரு வருடத்திற்குத் தடை விதித்திருக்கிறது. பொது வருங்கால வைப்பு நிதியில் உள்ள சேமிப்பிற்கு வட்டி விகிதம் 7.9லிருந்து 7.1 ஆகக் குறைப்பு செய்திருக்கிறது.

கொரோனா தொற்று காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு இந்திய பெரும் முதலாளிகள் தங்களது கொள்ளை வேட்டைகளை தீவிரப்படுத்தத் துவங்கியுள்ளனர். இதற்கு மத்திய அரசும் அருளாசி வழங்கியுள்ளது.




இன்று இந்திய நாட்டின் வருமான திரட்டல் வழிமுறையில் கூட்டாட்சிக் கோட்பாடு கடுமையான தாக்குதலுக்கு ஆளாகியுள்ளது. நேரடி வரி வசூல்முறையில் கார்ப்பரேட்டுகளுக்கு பெரும் வரிச்சலுகைகளை மத்திய அரசு அளிக்கும்போது அதிலிருந்து மாநில அரசுகளுக்கு கிட்ட வேண்டிய பங்கும் பாதிப்புக்கு ஆளாகின்றன. ஜி.எஸ்.டி முறையில் மாநில அரசுக்கு வரவேண்டிய தொகைகளும் உரிய நேரத்தில் வந்து சேருவதில்லை. நிதிப் பற்றாக்குறை மேலாண்மை சட்டம் போன்ற தடைகளும் மாநில அரசுகளின் கால்களைக் கட்டிப் போடுகின்றன. எனவே மாநில அரசுகள் சாதாரண காலத்திலேயே நிதிப்பற்றாக்குறையால் திணறுகின்றன. இந்தத் திணறல் ஒரு பெரும் இயற்கைப் பேரிடர் வருகிற காலத்தில் பன்மடங்கு விஸ்வரூபம் எடுக்கிறது. எனவே மாநில அரசுகளுக்கு கொரோனா பேரிடர் காலத்தில் பெரும் நெருக்கடிகள் உள்ளன என்பது உண்மையே. இந்த நெருக்கடிகளைச் சமாளிக்க தொழிற்சங்கங்கள் நான்கு கருத்துக்களை அரசின் முன் வைத்தன. 1) மத்திய அரசு தன்னிடம் உள்ள வரி திரட்டல் அதிகாரத்தைப் பயன்படுத்தி வசதி படைத்தவர்களிடமிருந்து அதிகமான வருமானத்தை உறுதி செய்ய வேண்டும். 2) மத்திய அரசின் கூட்டாட்சிக் கோட்பாட்டிற்கு எதிரான கொள்கைகளை மாநில அரசுகள் கேள்விக்கு ஆளாக்க வேண்டும். 3) அமைப்புசார் ஊழியர்களின் பங்களிப்பிற்காக தொழிற்சங்கங்களை அழைத்துப் பேச வேண்டும். தேசியப் பேரிடர் நிகழ்கிற காலங்களிலெல்லாம் அமைப்புசார் நடுத்தர



Scanned with CamScanner

ஊழியர்கள் ஏழை எளிய மக்களின் துயர் துடைக்க பெரும் பங்களிப்பைச் செய்து வந்துள்ளார்கள் என்பது வரலாறு. கேரள பெருவெள்ளம், சென்னை வெள்ளம், கஜா, தானே, ஒக்கி புயல்கள் ஆகிய பேரிடர்களில் இந்த ஊழியர்கள் நேரடியாக களத்தில் இறங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கியிருக்கிறார்கள். ஆகவே அமைப்புசார் ஊழியர்களின் சமூக அக்கறை மற்றும் பங்களிப்பை தொழிற்சங்கங்கள் விரும்புகின்றன. 4) அமைப்புசார் ஊழியர்களின் பாதிப்புகள் ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பினும் அவர்களின் சிரமங்களைக் கணக்கிற் கொண்டு முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். ஆனால் மத்தி அரசு இந்த நான்கு அம்சங்களில் எதையுமே கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் காதுகொடுத்துக் கேட்காமல் இவ்வூழியர்களின் 18 மாத அகவிலைப்படி உயர்வை தன்னிச்சையாக நிறுத்தி வைத்துள்ளது.

அதே நேரத்தில், பெரும் முதலாளிகள் மீது வரி, பன்னாட்டு நிறுவனங்கள் மீது சர்சார்ஜ், நடுத்தர ஊழியர்களை பாதிக்காத அளவிலான வருமான வரம்போடு 40 சதவீத வருமான வரி அறிமுகம் போன்ற ஆலோசனைகளை முன் வைத்த 50 ஐ.ஆர்.எஸ்.அதிகாரிகள் குழுவின் மீது மோடி அரசு துறைவாரியான விசாரணையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இது கார்ப்பரேட்டுகளின் மீது மோடி அரசு வைத்துள்ள கட்டற்ற பாசத்தை வெளிக்காட்டுகிறது. அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அரசாங்கமே தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இதுபோன்ற பேரிடர் காலங்களில் அவர்களின் ஊதியத்தில் 50 முதல் 75 சதவீதம் வரை அந்தந்த அரசாங்கங்கள் நிதி வழங்கிவரும் நிலையில் இந்தியா போன்ற வளரும் நாட்டில் அத்தகைய நிதியை வழங்காவிட்டால் கூட பரவாயில்லை, மத்திய மாநில அரசுகள் குறைந்தபட்சம் அரசு ஊழியர்களின் சம்பளத்தில் வெட்டுக்களை ஏற்படுத்தாமல் இருந்தாலே போதுமானது. ஆனால் தமிழக அரசு தனக்கு வரவேண்டிய நிதியைப் போராடிப் பெறுவதற்குக் கூட தயாராக இல்லாமல் பதிலே வராத கடிதங்களை எழுதி மக்களை ஏமாற்றும் வேலையை செய்து கொண்டிருப்பதை மக்களே அருவெறுப்புடன் பார்க்கத் துவங்கிவிட்டனர்.

தொழிலதிபர்களுக்கு கருணை, கடன் தள்ளுபடி, வரிச்சலுகைகளை அறிவித்துவிட்டு, தொழிலாளர்கள், விவசாயிகள், அன்றாடங்காய்ச்சிகளுக்கு எதிர்க்கட்சிகள் கோரிய நிவாரணத்தொகையில் பகுதி அளவேனும் கொடுத்திட மனமில்லாமல், வேலை நேரம் அதிகரிப்பு (நாட்டிலேயே முதல் மாநிலமாக உத்தரபிரதேச அரசு தன்னுடைய மாநில தொழிலாளர்களின் வேலை நேரத்தை 12 மணிநேரமாக நீட்டித்து அவசரச்சட்டம் இயற்றியுள்ளது), ரேஷன் குறைப்பு, வேலையிழப்பு போன்ற நடவடிக்கைகளை முடுக்கிவிட்டு, அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் ஊதியத்திலிருந்து அகவிலைப்படி, சரண், ஜிபிஎப் வட்டிக் குறைப்பு போன்றவற்றின் மூலம் தாக்குதல் தொடுத்திருக்கும் மத்திய மாநில அரசுகளின் நடவடிக்கைகளிலிருந்து இன்று ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் விளங்கி கொண்டிருப்பது. இந்த அரசு மக்களுக்கான அரசு அல்ல கார்ப்பரேட்டுகளின் பினாமி/விசுவாசி என்பதைத்தான்.

அரசுக் கருவூலத்திற்கு நிதியாதாரத்தை ஏற்படுத்துவது எப்படி என ஆலோசனை கூறிய ஐ.ஆர்.எஸ்.அதிகாரிகள் அவர்கள் கார்ப்பரேட் கம்பெனிகள் மீது செல்வவரி விதிக்க வேண்டும் என்று கூறிய காரணத்திற்காக அவர்கள் மீது பழிவாங்கும் துறைவாரி நடவடிக்கையை ஏவிவிட்டுள்ள மோடி அரசாங்கம் இழிவினும் இழிவான தரம் தாழ்ந்த அரசியலின் தாயகம் என்பதில் சந்தேகமில்லை.

கொரோனா தொற்று நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் ஆளும் அதிமுக அரசானது, பொதுமக்கள், எதிர்கட்சிகள், அரசியல் விமர்சகர்கள், அரசு ஊழியர்களின் எதிர்ப்பையும் மீறி ஊரடங்கு காலத்தில் மதுக்கடைகளை திறந்து 40 நாட்கள் மருத்துவர்கள், செவிலியர்கள், காவல்துறையினர், சுகாதாரத்துறையினர், மாநகராட்சி ஊழியர்கள், தூய்மைப்பணியாளர்கள் போன்ற அரசுத்துறை ஊழியர்கள் கட்டிக்காத்த சமூக விலகலை காற்றில் பறக்க விட்டுள்ளது. இதன்மூலம் இந்த அரசு ஏழை எளிய குடும்பப் பெண்களின் தாலிக்கயிரோடும், உயிரோடும் விளையாட ஆரம்பித்துள்ளது.

ஏற்கெனவே வறுமையில் உழலும் குடும்பப் பெண்கள் தற்போது குடிகாரக் கணவன்களால் குடும்ப வன்முறைக்கு ஆளாவதும் அந்தக் குடும்பங்கள் நடுத்தெருவில் நிற்கும் அவலங்கள் நிகழ்வதும் அதிகரித்துள்ள நிலையில் இது மக்கள் நல அரசுதானா? என்ற சந்தேகத்தை நடுநிலையாளர்கள், பெண்கள், பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய அரசாங்கத்திடம் இருந்து மக்களுக்கு வறுமையைத் தவிர வேறெந்த பரிசும் கிடைக்கப் போவதில்லை. எனவே, சேற்றில் தள்ளப்பட்ட இத்தேசத்தை தூக்கி நிறுத்தி, குளிப்பாட்டி ஆக்கப்பணி செய்ய அனைவரும் அணி திரள்வோம். ஏழைகளுக்கான இந்தியா இறந்துவிடவில்லை. மூர்ச்சையாகிக் கிடக்கிறது. உழைக்கும் வர்க்கம் இருக்கும் வரை அது எப்போதும் இறக்க முடியாது! ❖



Scanned with CamScanner

## மத்திய, மாநில அரசுகளின்
## ஊழியர், மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிராக

# போராடிப் பெற்ற உரிமைகளை பாதுகாத்திட அமைப்பு தினத்தில் சபதமேற்போம்!

**பெற்ற உரிமை ஒவ்வொன்றின் பின்னும்**
**உழைத்திட்ட கரங்கள் உண்டு**
**வடித்திட்ட வியர்வையுண்டு**
**சிந்திய ரத்தம் உண்டு அவற்றை**
**விட்டுவிடாமல் கட்டிக்காக்க வேண்டிய**
**கடமையும் உறுதியும் நமக்குண்டு**
**அதற்கான சபதமேற்போம் இன்று**

இந்தியாவில் தமிழ்நாட்டு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஊதியம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தபோது 1984ஆம் வருடம் மே 6ம் தேதி அரசு ஊழியர் இயக்கத்தின் திருப்புமுனை. ஆம் அன்றுதான் கூடல் மாநகரில் (மதுரை) ரயில் நிலையம் அருகில் ரீகல் திரையரங்கில் தமிழகத்தின் ஒட்டுமொத்த அரசு ஊழியர் பிரதிநிதிகள் குவிந்தனர். நூற்றுக் கணக்கான போலீசாரும் அங்கு குவிந்தனர். அவர்கள் பிரதிநிதிகளை தடுத்து மாநாடு நடத்தக்கூடாது, என்ஜிஓ சங்கம் தடை வழக்கு நீதிமன்றத்திலே பெற்று இருக்கின்றார்கள் என தடுத்தார்கள். தடையாணையை மீறி நெருப்பில் பூத்த மலராக அன்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தோன்றியது. அப்போது சங்கத்தின் அமைப்பாளராக தோழர் எம்.ஆர்.அப்பன், பொரு ளாளராக என்.எல்.எஸ். தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சங்கம் துவக்கிய ஒரு மாதத்திலேயே 70 ஆயிரம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். தொடர்ந்து இயக்கம், கிளை அமைப்பது, முன்னணி ஊழியர் கூட்டம் நடத்தி சங்கம் தோன்றிய 4 ஆண்டுகளிலேயே வேலைநிறுத்தத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது.

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம், மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் என்ற கோஷத்தை வைத்து 10.2.1988 அன்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் என அறிவித்தது.

தமிழகத்திலேயே அதனை சிறப்பாக நடத்த 1947க்கு பிறகு 25.1.1988 அன்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் தலைமை செயலாளரை சந்தித்து வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுக்கப்பட்டது.

கடுமையான அரசு மிரட்டலையும் நடவடிக்கைகளையும் மீறி வெற்றிகரமாக 10.2.1988 வேலைநிறுத்தம் நடைபெற்றது.

இந்த வேலைநிறுத்தம் அரசு ஊழியர்கள் மத்தியில் ஒரு உத்வேகத்தை அளித்தது. 1978ல் போராட்டம், 1985 ஜாக்டீ போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கில் பெண்கள் உட்பட தீபாவளித் திருநாள் அன்று சிறையிலேயே இருந்து நடத்திய போராட்டம், சோர்வோடு இருந்த ஆசிரியர்கள் மத்தியில் 10.2.1988 உற்சாகத்தை ஏற்படுத்தியது.

இதன் விளைவாக 31 நாள் வேலை நிறுத்தம் 1947 கண்ட கனவு இந்த வேலை நிறுத்தத்தின் காரணமாகவே இன்று கௌரவமான சம்பளம், ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருக்கிறோம் என்றால் அதற்கு இந்த வேலைநிறுத்தமே காரணம். இந்த வேலை நிறுத்தத்திற்கு உந்துசக்தியாக 10.2.1988-ல் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நடத்திய ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் ஆணிவேராக அமைந்தது.

இந்த வேலை நிறுத்தத்திற்கு பிறகு தமிழகத் தில் அரசு ஊழியர் சங்கம் அசைக்கமுடியாத சக்தியாக மாறியது. பல துறைவாரி சங்கங்கள், என்ஜிஓ பணியாளர் இணைப்பு சங்கம் என்ற பெயரில் அடிமைப்பட்டிருந்த என அத்தனை சங்கங்களிலும் ஒரு விடுதலை கிளர்ச்சி ஏற்படுத்தி அத்தனையும் அரசு ஊழியர் சங்கத் தலைமையை ஏற்றன.






Scanned with CamScanner

லட்சக்கணக்கான ஊழியர்களை ஒன்று திரட்டி சுதந்திரக்காற்றை உரிமைகளை போராட்டம் நடத்திய உரிமைகளைப் பெற்றிட அவர்களுக்கு அரசு ஊழியர் சங்கம் போதித்தது.




சத்துணவு ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், கிராம சுகாதார செவிலியர்கள், சாலை பணியாளர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், அமைப்பு இல்லாதவர்களை சங்கம் அமைத்து தட்டி எழுப்பி பல்வேறு இயக்கங்கள், வேலை நிறுத்தங்கள் மூலமாக அவர்களின் கோரிக்கைகளை வென்றெடுக்க ஆவேசத்தோடு இன்று முன்னேறி வருகின்றார்கள்.

தன் ஊழியர்கள் நலனை மட்டும் அரசு ஊழியர் சங்கம் காக்க போராடவில்லை. அதேபோல் வேலையின்மை இந்த நாட்டில் எப்படி பேரழிவை உண்டாக்குகின்றது என்பதை உணர்ந்து லட்சக்கணக்கான இளைஞர்களின் நலனுக்காக சிஐடியு தலைமையில் அமைக்கப்பட்ட வேலையின்மை எதிர்ப்பு நடவடிக்கைக் குழுவில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டது.

தமிழகத்தில் அரசியல் கட்சிகள் கூட நடத்த அச்சப்படும் நிலையில் இருந்த நேரத்தில் சாதிக் கொடுமைக்கு எதிராக மாநாடு மதுரையில் நடத்தி தமிழகம் முழுவதும் தனது வலிமையான எதிர்ப்பை தெரிவித்தது.

1991 புதிய பொருளாதார கொள்கை என்ற பெயரில் உலகமயம், தனியார்மயம், தாராளமயம் தலையெடுத்தபோது அன்று தமிழகம் முழுவதும் கருத்தரங்கம் நடத்தி ஊழியர்களை எச்சரித்து தட்டி எழுப்பியது. ஜீரோ பட்ஜெட் எதிர்ப்பு இயக்கத்தை கையில் எடுத்து ஆட்குறைப்புக்கு எதிராக ஊழியர்களை திரட்டியது, நாடு தழுவிய வேலை நிறுத்தங்களிலும் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டது.

உலகமயம் தாராளமயம் தனியார்மயம் உச்சகட்ட தாக்குதல்களால் ஏற்பட்ட இழப்புகளை எதிர்த்து 2002, 2003 வேலைநிறுத்தம் போன்ற தொடர்ச்சியான போராட்டத்தில் தன்னை முழுமையாக அரசு ஊழியர் சங்கம் ஈடுபடுத்திக் கொண்டது.

தமிழ்நாட்டில் கடந்த 50 ஆண்டுகளாக இரண்டு கட்சிகள் மாறி மாறி ஆட்சி பொறுப்பில் இருந்துள்ளன. இவற்றின் ஆட்சிக் காலத்தில் அரசு ஊழியர்கள் புதிய பென்சன் உட்பட பல கோரிக்கைகளுக்கான போராட்டமும், ஏறிவரும் விலைவாசியை ஈடுகட்ட முடியாமல் தங்கள் வாழ்க்கைக்கு தேவையான ஊதியத்தை வழங்க கோரி தொடர்ந்து பல போராட்டங்கள் நடத்தி உள்ளோம்.

ஆனால் தமிழகத்தின் முதல்வராக இருந்தவர்கள் இக்கோரிக்கைகள் குறித்து என்ன கருத்து தெரிவித்துள்ளார்கள் என்பது தற்போது யோசித்துப் பார்த்தால், எல்லா ஆட்சியாளர்களும் அரசு ஊழியர்களுக்கு எதிரானவர்களாக இருந்துள்ளார்கள் என்பது வேதனைக்குரியதாக உள்ளது. நாடு விடுதலை பெற்ற துவக்கத்தில் தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த குமாரசாமி ராஜா 'அரசு ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்க அரசிடம் பணம் இல்லை' என்றார். அதன்பின் வந்த ராஜாஜி 'நாட்டில் பஞ்சம் எனவே சம்பள வெட்டு தவிர்க்க முடியாது' என்றார். அடுத்து வந்த காமராஜர் 'விவசாயிக்கு நாளொன்றுக்கு 12 அணா கூலி மட்டும் கொடுக்கப்படும் போது உங்களுக்கு ஏன் இவ்வளவு சம்பளம்?' என்ற கேள்வியை முன்வைத்தார். அடுத்து வந்த கலைஞர் கருணாநிதி 'கருணை இருக்கிறது நிதி இல்லை' என்றார். பின்னர் வந்த புரட்சித் தலைவர் எம்ஜிஆர் 'அரசு ஊழியர்களின் போராட்டத்தை மக்கள் பார்த்துக் கொள்வர்'



Scanned with CamScanner

என்றார். செல்வி ஜெயலலிதா 'அரசின் வருவாயில் 94% அரசு ஊழியர்களின் சம்பளத்திற்கு சென்றுவிடுகிறது, மக்களுக்கு வெறும் 6% தான்' என்று உண்மைக்கு புறம்பான கருத்துக்களை தெரிவித்தார். ஆனால் தற்போதைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களின் வழியில் ஆட்சி நடத்தும் முதல்வர் அவர்கள் 'நிறைய அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியைகளுக்கும் செய்துவிட்டேன்' என்றார். 'தமிழகம் நிதி பற்றாக்குறை உள்ளது. தமிழ்நாட்டு (கடன் 4.52 லட்சம் கோடி) அரசு ஊழியர்களுக்கு 71% செலவு செய்யப்படுகிறது' என்று இவரும் உண்மைக்கு புறம்பான கருத்துக்களை தெரிவித்து கொண்டிருக்கிறார்.

இவற்றிலிருந்து ஆட்சியாளர்கள் யாராக இருந்தாலும் அரசு ஊழியர்களை பொறுத்தவரை ஒரே கருத்தை உடையவர்களாக தான் இருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள முடியும். இத்தகைய சூழலில்தான் உலகத்தை அச்சுறுத்திக் கொண்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றுநோய்க் பணிகளில் அரசு ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் பணி செய்து கொண்டு இருக்கின்றார்கள்.

உலகத்தில் ஸ்பானிஷ் ப்ளு 1918-1920ஆம் ஆண்டுகளில் உலகத்தை ஆட்டிப் படைத்தது. இந்த ஸ்பானிஷ் ப்ளு காய்ச்சலால் இறந்தவர்கள் 5 கோடிப் பேர், இந்தியாவில் 15 லட்சம் பேர் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

அதற்கு அடுத்த நூறு ஆண்டுகள் கழித்து சீனாவில் தொடங்கிய இந்த கொரோனா வைரஸ் தொற்று உலகத்தில் எல்லா நாடுகளையும் ஆட்டிப் படைத்து வருகிறது. குறிப்பாக உலக வல்லரசு நாடுகளையும் விட்டு வைக்கவில்லை. அதில் இந்தியாவிலும் கொடிய வைரஸ் தொற்று நோய் பரவி உள்ளது. இந்தியா முழுவதும் மார்ச் 24ஆம் தேதி முதல் ஊடரங்கு அறிவித்து மக்கள் வீடுகளுக்குள் 40 நாட்கள் முடங்கியுள்ளனர். நாளுக்கு நாள் இந்தியாவிலும் குறிப்பாக தமிழகத்திலும் தொற்றுநோய் அதிகரித்துக் கொண்டு உள்ளது. ஏப்ரல் 30இல் தமிழகத்தில் 2757 பேர் பாதிப்பு, குணமடைந்தோர் 1341, இறப்பு 29. கொரோனா வைரஸ் பாதிப்புடன் 1184 பேர், அறிகுறிகளுடன் 2099 பேர் தமிழகத்தில் அதிகபட்சமாக பாதிப்பு சென்னை 1 2 5 7 பேர். இந்த தொற்று நோய் சமூக பரவலாக மாறுவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக மக்கள் கருதும் நிலைக்கு அனுதினமும் பத்திரிகைகளும் ஊடகங்களும் வாயிலாக அறிவிக்கிறார்கள். இதனால் மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு இருக்கும் எங்களது அரசு ஊழியர்கள் அரசின் நடவடிக்கைகள் மற்றும் முடிவுகளில் முன்னணிப் படை தளபதிகளாக இருந்து தமது உயிரை துச்சமென மதித்து அரசின் நடவடிக்கைகளுக்கு அர்ப்பணிப்பு உணர்வுடன் களத்தில் நின்று பணியாற்றுகிறார்கள். மருத்துவர்கள், செவிலியர்கள், கிராம சுகாதார செவிலியர்கள், ஆய்வக நுட்புனர், மருந்தாளுநர்கள், சுகாதார ஆய்வாளர்கள், ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள், தூய்மைப் பணியாளர்கள், காவல்துறை, தீயணைப்புத் துறை, வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித் துறை, சமூக நலத்துறை, சத்துணவு, அங்கன்வாடி, கூட்டுறவு மற்றும் உணவுத்துறை வேளாண்மைத்துறை, மாநகராட்சி, நகராட்சி பேருராட்சி, கருவூலத்துறை, மின்சாரம் அதேபோல் கொரோனா தொற்று நோய் தடுக்கும் பணியில் அனைத்து துறை ஊழியர்களும் இரவு பகல் பாராது கண் துஞ்சாமல் பணியை பார்த்துகொண்டு இருக்கிறார்கள். ஒரு சில இடங்களில் முக கவசம், பாதுகாப்பு ஆடைகள் இல்லாமல் பணிபுரிந்து கொண்டு உள்ள நிலையில் தமிழக அரசு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் அரசு ஊழியர்களுக்கு 18 மாதங்களுக்கு அகவிலைப்படி நிறுத்தம், வருங்கால வைப்பு நிதி வட்டி 7.9 சதவீதத்திலிருந்து 7.1 சதவீதமாக குறைப்பு, சரண்டர் விடுப்பு ஒரு ஆண்டுக்கு இல்லை என அறிவித்துள்ளது. தமிழக அரசின் இந்த அறிவிப்பு கொரோனா நோயைவிட கொடிய செயலாக பார்க்கிறோம். இதனால் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணிபுரியக்கூடிய ஊழியர்கள் தங்கள் பணியை முழு ஈடுபாட்டுடன் பணி செய்வதில் சுணக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. அதுமட்டுமல்ல இப்பணியை பார்க்கும் ஊழியர்களை அரசு அங்கீகரிக்கப்படவில்லை என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு பிரதமர் அவர்கள் பணியில் உள்ள மருத்துவர்கள், செவிலியர்கள், தூய்மைப் பணியாளர்கள், காவல்துறை இன்னும் பல்வேறு துறைகளில்



Scanned with CamScanner

பணிபுரியும் ஊழியர்களுக்கு கை தட்டுங்கள், விளக்கு ஏற்றுங்கள் அவர்களுக்கு மரியாதை செய்யுங்கள் என்று சொல்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களே அவர்கள் சம்பளத்தில் அகவிலைப்படி, சரண்டர் ரத்து, ஜிபிஎப் வட்டி குறைப்பு செய்து அடிவயிற்றில் அடித்தது நியாயமா மாண்புமிகு முதல்வர் அவர்களே சொல்லுங்கள்.

அரசு ஊழியர் சங்கம் கொரோனா தொற்று அறிவிப்பு வந்தவுடன் தமிழக அரசு மார்ச் 24 முதல் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்த உடன் தொற்றுநோய் தடுப்பு பணி பார்க்கக்கூடிய ஊழியர்களுடன் மற்ற துறை ஊழியர்களும் பணி பார்ப்பதற்கு தயார் என்பதோடு மட்டுமல்ல, அரசு ஊழியர் ஒரு நாள் சம்பளத்தை தானாக முன்வந்து கொரோனா நிவாரண நிதிக்கு கொடுப்பதாக அறிவிப்பு செய்தது. அதனைத் தொடர்ந்து ஜாக்டோ-ஜியோ அறிவித்தது. அதற்கு தமிழக முதல்வர் அளித்த தொலைக்காட்சி பேட்டியில் அரசு ஊழியர்கள் கொரோனா தொற்று நோய்க்கு முதலமைச்சர் நிவாரண நிதிக்கு ரூ.110 கோடி கொடுத்ததற்கு நன்றி என்று சொன்னதை நினைவில் கொள்கிறோம்.

அதேபோல் கொரோனா தொற்று தடுப்பு பணிகளில் பணிபுரியக்கூடிய ஊழியர்கள் நோய்த்தொற்று ஏற்பட்டு இறக்க நேரிட்டால் அவர்களுக்கு ரூ. 50 லட்சம் வழங்க வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அரசு ஊழியர் சங்கம் 14.4.2020 கோரிக்கை மனு அளித்தோம். அதனப்படையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் 22.4.2020 அன்று ரூ. 50 லட்சம் நிதி வழங்கப்படும், அவர்களது குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு தகுதியின் அடிப்படையில் அரசுப் பணி வழங்கப்படும் என்ற அறிவிப்பை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாண்புமிகு தமிழக முதல்வருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

அதே நேரத்தில் இந்த காலகட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் பல்வேறு கோரிக்கை முறையீடுகள் அளித்துள்ளோம். அதில் குறிப்பாக கடந்த ஆண்டு ஜாக்டோ-ஜியோ காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்கள் மீது போடப்பட்ட 17பி குற்ற குறிப்பாணை மற்றும் வழக்குகள், பணி மாறுதல்களை ரத்து செய்ய வேண்டும். கடவுளுக்கு சமமாக போற்றக்கூடிய மருத்துவர்கள் என்று தொலைக்காட்சி பேட்டியில் மாண்புமிகு தமிழக முதல்வர் பாராட்டை தெரிவிக்கிற தாங்கள் கடந்த ஆண்டு போராட்டம் நடத்தியதால் நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவர்கள் பணி மாறுதல் செய்து தமிழக அரசு என ரத்து செய்து ஏற்கனவே பணிபுரிந்த இடத்தில் பணிபுரிய ஆவண செய்யப்பட வேண்டும். தமிழக அரசு ஊழியர்களை விரோதிகளாகவும் எதிரிகளாகவும் பார்க்காமல் இந்த காலகட்டத்தில் கொரோனா என்ற கொடிய நோயை எதிர்த்து அரசின் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்து உயிரை பணயம் வைத்து பணி செய்யக்கூடிய ஊழியர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதுடன் போடப்பட்ட மூன்று அரசு ஆணைகளையும் ரத்து செய்ய வேண்டும் என தமிழக அரசை கேட்டுக்கொள்கிறோம்.

அவ்வாறு கோரிக்கைகளின் நிறைவேற்றப்படவில்லை என்றால் 2003 போராட்டத்தை நோக்கி செல்ல வேண்டிய கட்டாயத்துக்கு தள்ள வேண்டாம் என தமிழக அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம்.

## தமிழக அரசு கொரோனா பணியில் அவுட்சோர்சிங் ஒப்பந்த முறை நியமனம்

உலகில் வல்லரசு நாடுகளில் முதல் நாடு அமெரிக்கா. அந்த நாட்டில் தான் உலகில் அதிக எண்ணிக்கையில் கொரோனா வைரசால் இறந்தவர்கள் அதிகம். ஏனென்றால் அமெரிக்காவில் 90% மருத்துவமனைகள் தனியார் வசம் உள்ளது. ஆனால் இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் பெரும்பாலான மருத்துவமனைகள் அரசு மருத்துவமனைகள். இந்தியாவில் அரசு மருத்துவக் கல்லூரியில் அதிகமுள்ள மாநிலமும் தமிழ்நாடுதான். அதனால்தான் கொரோனா நோய்த்தொற்று எண்ணிக்கை குறைவாக உள்ளது. அதை உள்வாங்கிக் கொண்டு தமிழக அரசு ஒப்பந்த முறை அவுட்சோர்சிங் முறையை ரத்து செய்ய வேண்டும். ஏற்கனவே ஓய்வூதியத்தில் மூன்றரை லட்சம் ஊழியர்கள் பல ஆண்டுகளாக பணிபுரிந்து வரும் நிலையில் வைரஸ் நோய் பரவி கொண்டிருக்க இந்த சூழ்நிலையிலும் தமிழக அரசு எம்ஆர்பி மூலம் செவிலியர்கள், ஆய்வக நுட்புனர், சுகாதார ஆய்வாளர்கள் என்று ஒப்பந்த முறையில் எடுப்பதை முற்றிலும் ஏற்கத்தக்கதாக இல்லை. ஒப்பந்த முறையை கைவிட்டு நிரந்தர



Scanned with CamScanner

ஊழியர் ஆக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் தமிழக அரசு ஊழியர் சங்கம் அரசுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் விளக்கம் கோரிக்கை மனு அளித்துள்ளோம்.

மேலே கண்ட அமெரிக்கா மட்டுமல்ல மருத்துவத்தில் வளர்ச்சியடைந்த நாடுகள் இத்தாலி, ஸ்பெயின், இங்கிலாந்து போன்ற நாடுகள் இந்த தொற்று நோய் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்க காரணம் மருத்துவம் அனைத்தும் தனியார் கார்ப்பரேட் நிறுவனங்கள் வசம் உள்ளது. ஏன் தமிழ்நாட்டில் இந்த நேரத்தில் மண்டை வலி, காய்ச்சல் போன்றவற்றால் கூட தனியார் மருத்துவமனையில் மருத்துவம் பார்க்காமல் மருத்துவமனை மூடிவிட்டார்கள். ஆனால் அரசு மருத்துவமனைகளில் 24 மணி நேரம் செயல்படுகிறது. அங்கு பணிபுரியக்கூடிய துறை துறை சார்ந்த ஊழியர்களும் அயராது அர்ப்பணிப்பு உணர்வுடன் (கொரோனா நோய்த்தொற்று மருத்துவத் துறை ஊழியர்களுக்கு ஏற்பட்ட போதும்) தொடர்ந்து களத்தில் நின்று பணிபுரிந்து கொண்டு இருக்கிறார்கள். இதை தமிழக அரசு புரிந்து கொண்டு ஒப்பந்த முறையை கைவிட்டு நிரந்தர நியமனங்கள் செய்திட வேண்டும் என தமிழக அரசை கேட்டுக்கொள்கிறோம்.

அரசு ஊழியர்கள் பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக மட்டும் போராடக் கூடியவர்கள் அல்ல என்பதை பல காலகட்டங்களில் நிரூபித்துள்ளோம். 2015 சென்னை வெள்ளம், டெல்டா மாவட்டங்களில் கஜா புயல் பாதிக்கப்பட்ட போது அரசு ஊழியர் சங்கம் நேரடியாக களத்திற்கு சென்று ஏழை எளிய மக்களுக்கு பொருளாதார உதவிகளையும், நிவாரண பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட இயக்கம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்.

அதைத் தொடர்ந்து இந்த கொரோனா தொற்றுநோய் பணிகளில் அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட, வட்ட, முன்னணி ஊழியர்கள் பல்வேறு மாவட்டங்களில் ஏழை எளிய மக்களுக்கு அரிசி காய்கறி பொருட்களும், முகக் கவசம், கபசுரக் குடிநீர், ரத்ததான முகாம் போன்ற பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட அனைத்து மாவட்ட முன்னணி ஊழியர்களுக்கும் மாநில மையத்தின் சார்பில் நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## 37வது ஸ்தாபன தினம் 1984-2020

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தொடங்கிய 37 ஆண்டுகள் ஆகிவிட்டது. இந்த ஸ்தாபனத்தில் அரசு ஊழியர் தொழிலாளர் உரிமை ஒற்றுமைக்காகவும் அரசாங்கத்தின் முரட்டு தாக்குதல்களை எதிர்கொண்டு முறியடிக்கவும் புதிய விடியலை நோக்கி முன்னேறுவோம். உளத்தூய்மையோடு ஒன்றுசேர்ந்து போராடுவோம் என இந்த தினத்தில் உறுதியேற்போம்.

ஊரடங்கு மிகச்சரியாக கடைபிடிக்கும் கடமை நமக்கு இருக்கிறது. எனவே கடந்த ஆண்டு நம்முடைய ஸ்தாபன நிகழ்ச்சி மிகச் சிறப்பாக அனைத்து கிளைகளிலும் அதிக எண்ணிக்கையில் ஊழியர்களை திரட்டி மிக எழுச்சியோடு தினத்தை கொண்டாடினோம். ஆனால் இந்த நேரத்தில் அதற்கான வாய்ப்பு குறைவு. எனவே நமது தோழர்கள் நமது கிளைகளில், அலுவலக வளாகங்களில் சமூக விலகலை கடைப்பிடித்து முக கவசம் அணிந்து ஸ்தாபன தினத்தன்று சாத்தியமான இடங்களில் நமது சங்கத்தின் கொடியை ஏற்றுமாறு மாநில மையத்தின் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

## புலம்பெயர் தொழிலாளர்கள்

இன்று இந்திய பொருளாதாரம் 71 ஆண்டுகள் இல்லாத மிக மோசமான நிலையில் சிக்கிக் கொண்டு இருக்கின்ற நிலையில், தற்போது வைரஸ் தொற்றின் காரணமாக வேலையின்மை, உற்பத்தி, விவசாயம் என்று மிகப்பெரிய வீழ்ச்சியை சந்தித்து கிட்டத்தட்ட சரிவை நோக்கி சென்று உள்ளது. இந்த ஊரடங்கு காலகட்டத்தில் நிலைமை இன்னும் மோசமடைந்துள்ளது. மக்களின் துன்பங்களும் துயரங்களும் அளவுக்கு அதிகமாக வளர்ந்துள்ளது.

நாடு தழுவிய ஊரடங்கு ஏற்கனவே 40 நாட்கள் இருந்த நிலையில் மேலும் இரண்டு வாரங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. ஊரடங்கு துவங்கியது முதல் கோடிக்கணக்கான இந்திய மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக புலம் பெயர் தொழிலாளர்களை மத்திய, மாநில அரசுகள் அலைக்கழித்துக் கொண்டிருப்பது வெட்கித் தலைகுனிய வேண்டிய தேசிய அவமானமாக கருத்தில் கொள்ளப்படுகிறது.



Scanned with CamScanner

1979இல் தனி சட்டம் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த சட்டத்தில் இந்த நாட்டின் குடிமக்கள் பணிபுரிவதற்காக நாட்டின் எந்த ஒரு பகுதிக்கும் செல்லலாம். அது அடிப்படை உரிமை என்கிறது அரசியல் அமைப்புச் சட்டம். ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இந்தியாவில் உள்ள மாநிலங்களில் மாநிலங்களுக்கு இடையே தொழிலாளர்களில் புலம்பெயர் தொழிலாளர்கள் 13.9 கோடி பேர் பல்வேறு தொழில்களில் இடம்பெயர்ந்துள்ளனர். இன்று கொரோனா நோய்த்தொற்று ஊரடங்கு பல்வேறு மாநிலங்களில் சொல்லொணா துயரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். பல்வேறு மாநிலங்களில் தங்கி இருக்கக்கூடிய தொழிலாளர்கள் ஆங்காங்கே ஆயிரக்கணக்கில் ஒன்றுதிரண்டு ஆர்ப்பாட்டங்கள் நடத்த ஆரம்பித்திருக்கிறார்கள். சிறப்பு ரயில் மூலமாக தங்களை சொந்த மாநிலங்களுக்கு அனுப்ப வேண்டும் என்பது அவருடைய கோரிக்கை.

இதேபோல் மும்பை தாராவியில் 2 சதுர கிலோ மீட்டரில் 10 லட்சம் பேர் வசிக்கிறார்கள். இந்தியாவில் கொரோனா தொற்று அதிகம் உள்ள மாநிலம் மகாராஷ்டிரா. 10 ஆயிரத்தை தொட்டிருக்கிறது. 1075 பேர் இறந்துள்ளார்கள். அதில் 34 பேர் தாராவியில். ஆயிரம் பேருக்கு மட்டுமே தாராவியில் பரிசோதனை. தாராவியில் முதலில் இறந்தது அங்கு கிளினிக் வைத்திருந்த மருத்துவர். 100 சதுர அடியில் நான்கு பேர் வசிக்கிறார்கள். எந்த வீட்டிலும் கழிப்பறை கிடையாது. அதனால் நோய் தொற்று வேகமாக பரவி உள்ளதாக பத்திரிகைகளில் செய்தி வெளிவருகிறது. இன்னும் அதிர்ச்சியான தகவல் மகாராஷ்டிராவில் சிவசேனா பத்திரிகை சாம்னாவில் வெளிவந்த தகவல். வெளிமாநில தொழிலாளர்களை சொந்த மாநிலத்திற்கு அனுப்ப வேண்டும். மராட்டியர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை. ஏனையோருக்கு தற்காலிக முகாம்களில் மருத்துவம். தாராவியில் அத்தனை கண்களும் தமிழக அரசை நோக்கி உள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அந்தந்த மாநிலத்திற்கு போக விரும்பும் அவர்களை அழைத்து வர மத்திய, மாநில அரசுகள் ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு சில மாநில அரசுகள் தொழிலாளர்களை அழைத்து வர ஏற்பாடு செய்தது போல் தமிழக அரசு இன்னும் அறிவிப்பு எதையும் வெளியிடவில்லை என்ற குரல்கள் கேட்கத் தொடங்கியிருந்தன. இந்த விஷயத்தில் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சொந்த ஊரில் தாய்மொழி, உறவுகள் எல்லாவற்றையும் விட்டு புலம்பெயர்ந்து செல்லும் ஒரு நபர் இக்கட்டான சூழலில் தன்னை தன் அரசாங்கம் காப்பாற்றும், தாங்கிப் பிடிக்கும் என்ற நம்பிக்கையிலேயே வெளியேறுகிறார்கள். இக்கட்டான காலகட்டத்தில் அந்த நம்பிக்கையை காப்பது மத்திய மாநில அரசுகளின் கடமை. எந்த அவகாசமும் அளிக்காமல் அமுலுக்கு கொண்டு வரப்பட்ட இந்த ஊரடங்கில் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் புலம்பெயர் தொழிலாளர்கள் தான். இந்தியத் தொழில்துறையும் நகரங்களும் உயிரோட்டமாக இயங்கிட தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் புலம்பெயர் தொழிலாளர்கள். உடனடியாக அரசுகளைத் தாங்கிப் பிடித்து இருக்க வேண்டும். இந்தியாவிலேயே புலம்பெயர் தொழிலாளர்களின் இணக்கமான சூழ்நிலையில் வைத்திருக்கும் மாநிலம் கேரளா.

ஏனோ தெரியவில்லை பிடிவாதமாக அவர்களை அவரவர் பிழைப்பில் இருந்த நகரங்களிலேயே தங்க சொன்னது மத்திய அரசு. நடைபயணமாக செல்ல முற்பட்ட போதும் கூட அவர்களை அனுமதிக்கவில்லை. அதை மீறி தொழிலாளர்கள் பல ஆயிரம் கிலோமீட்டர் தூரம் நடந்து சென்றபோது செத்து மடிந்தவர்கள் உண்டு. மூன்றாவது கட்ட ஊரடங்கும் அமலாக்கப்பட்ட பின்னர் பல மாநில அரசுகளில் அழுத்தம் காரணமாக சிறப்பு ரயில்கள் மூலம் சொந்த மாநிலங்களுக்கு தொழிலாளர்களை அனுப்ப மத்திய அரசு ஒப்புக் கொண்டது. மிக காலதாமதமாக எடுத்த இந்த நடவடிக்கைகள் அரசின் முழுமையான திட்டம் என்னவென்று தெரியவில்லை. ஏனென்றால் பல லட்சம் தொழிலாளர்கள் ஊர் திரும்ப காத்திருக்கும் நிலையில் சில ஆயிரம் பேரை அனுப்புவதற்கான ரயில்களே இதுவரை அறியப்பட்டிருக்கின்றன. இந்த ரயில்களில் வழக்கமான கட்டணத்தை காட்டிலும் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட்டது மிகப்பெரும் கொடுமை. இந்த கொடிய நோய்த் தொற்றில் இருந்து தப்பித்து தனது சொந்த ஊருக்கு செல்கின்ற அந்த ஏழைகளிடம் இரட்டிப்புக் கட்டணம் வசூல் செய்கிறது.



Scanned with CamScanner

அதாவது சாப்பாட்டுக்கு சேர்த்து மத்திய அரசு வசூலித்தது. இது தான் ஏழைகளின் மேல் விசுவாசம் காட்டும் அரசு. பல லட்சம் கோடி முதலாளிக்கும் செல்வந்தர்களுக்கும் வரிச்சலுகை மற்றும் வாங்கிய கடன்கள் ரத்து செய்த மத்திய அரசே, ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளுக்கு சமம். அதன் பலன்களை வெகுவிரைவில் இந்திய நாட்டின் உழைப்பாளி மக்கள் நிச்சயம் உங்களுக்கு வழங்குவார்கள்.

## உலகளவில் தொற்று நோயின் தாக்கம்

1920ஆம் ஆண்டுகளில் உலகத்தை ஆட்டிப்படைத்த ஸ்பானிஸ் ப்ளு, இதனால் ஐந்து கோடி பேர் இறந்துள்ளனர். 100 ஆண்டுகளுக்கு பிறகு கொரோனா என்ற தொற்றுநோய் ஏற்பட்டு இருக்கிறது.

உலகில் 780 கோடி மக்கள் இந்த தொற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 15 லட்சம் பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஒன்றரை லட்சம் பேர் வரை உயிரிழந்துள்ளனர். அமெரிக்கர்கள் 50 ஆயிரம் பேர் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கிறார்கள் இந்த நோய்த்தொற்று நீடிக்குமா நீடிக்கும் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது.

1999 உலக சுகாதார நிறுவனம் இருபதாம் நூற்றாண்டின் முதல் ஐம்பது ஆண்டுகளில் உலக நாடுகளில் ஆண்டுதோறும் 20 லட்சம் பேர் மலேரியா காய்ச்சலால் இறந்தனர். இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன் ஆண்டுதோறும் 10 லட்சம் பேர் மலேசியாவில் இறந்தார்கள். தற்போது 20 ஆயிரம் பேர்.

கடந்த நூற்றாண்டில் பெரியம்மை மட்டும் 30 கோடி பேர், 25 கோடி பேர் தட்டம்மை நோயால் உலக நாடுகளில் பாதிக்கப்பட்டனர். தெய்வ குற்றம் மூடநம்பிக்கையில் இருந்து நீக்கப்பட்டு 1980களில் பெரியம்மை முற்றிலும் ஒழிக்கப்பட்டது. அறிவிப்பு அதேபோல் காசநோய் உலகில் 30 கோடி பேர் உயிரிழப்பு ஆனால் 2018 இல் உலக நாடுகள் இறப்பு 15 லட்சம் பேர் அமைந்துள்ளது.

இவ்வாறு உலகம் முழுவதும் பல்வேறு காலகட்டங்களில் கொடிய நோய்களுக்கான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இச்சூழ்நிலையில் இந்த கொரோனா தொற்று அதற்கான மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்ற செய்தி மேலும் மேலும் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துகிறது. இந்தியாவும் உலக நாடுகளும் இந்த நோயை எதிர்கொள்ள விதமான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

## இந்தியா

கொரோனா வைரஸ் நோய்க்கு ஒதுக்கப்பட்ட நிதி 1.75 இலட்சம் கோடி. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.5 சதவீதம். இதுதான் இந்திய நாட்டு மக்கள் 150 கோடி பேருக்கு இந்நோய் பரவாமல் காப்பாற்றுவதற்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது. ஆனால் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வரி தளர்த்தப்பட்டது. 1.45 லட்சம் கோடி அதேபோல் கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு கடன்களை 7 லட்சத்து 70 ஆயிரம் கோடி தள்ளுபடி. தனியார் முதலாளிகள் வேண்டுமென்றே திருப்பி செலுத்தாத பல லட்சம் கோடி வங்கிக் கடன் வசூலிக்கப்படாமலேயே உள்ளது.

பல்லாயிரம் கோடி ரூபாய் வங்கியில் கடன் வாங்கிய 36 முதலாளிகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு ஓடி இருக்கிறார்கள். இது போதாதென்று கார்ப்பரேட்டுகள் கட்ட வேண்டிய வரி நிலுவை 8 லட்சத்து 90 ஆயிரம் கோடி இருக்கிறது. இதிலிருந்து மத்திய ஆட்சியாளர்கள் யாருக்கு விசுவாசமாக இருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

## அமெரிக்கா

உலக சுகாதார நிறுவனம் ஜனவரியில் 2020 உலக நாடுகளுக்கு இந்த கொரோனா தோற்று நோய் குறித்து விழிப்புடன் இருக்குமாறும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அனைத்து நாடுகளையும் கேட்டுக் கொண்டது. அதை அமெரிக்கா சட்டை செய்யாமல் உலகம் போராடிக் கொண்டு இருந்தபோது அமெரிக்க ஒரு படி மேலே போய் எங்கள் மருத்துவர் செயல்திறனுக்கு முன்னால் இந்த நோய் எங்களை எதுவும் செய்ய முடியாது என்றார் டிரம்ப். ஆனால் இன்றைய தினம் நோய் பாதிப்பில் முதலிடம். மாத்திரைகளுக்கு கூட இந்தியாவிடம் கையேந்த வேண்டிய நிலை. (உலகின் போலீஸ்காரனாக செயல்படும் அமெரிக்கா மிரட்டி இந்த மருந்து வாங்க வேண்டிய நிலை) உலக வல்லரசு நாடு அமெரிக்கா அங்குதான் உணவு வங்கித் திறந்திருக்கிறார்கள். அப்படி என்றால் உணவு இன்றி தவிக்கிறார்கள் மக்கள்.



Scanned with CamScanner

அமெரிக்கா இதுவரை 2 ட்ரில்லியன் டாலர் (150 லட்சம் கோடி) நிவாரணத் திட்டங்கள், 301 பில்லியன் டாலர், நேரடியாக பட்டுவாடா 500 மில்லியன் டாலர், வியாபார அமைப்புகளுக்கு குறைந்த வட்டியுடன் ஒவ்வொரு நிறுவனங்களுக்கு 2 மில்லியன் டாலர் (30 ஆண்டு கடன்) 250 மில்லியன் டாலர் வேலையற்றவர்களுக்கு 280 மில்லியன், சிறு வணிக உரிமையாளருக்கு இவ்வளவு அறிவித்தும் கடுமையான பொருளாதார வீழ்ச்சியும், 66 லட்சம் பேர் வேலை இழந்தும் கடும் நிதி நெருக்கடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. இதுதான் ஏகாதிபத்தியத்தின் வெளிப்பாடு.

## இங்கிலாந்து

இந்த கொரோனா நோயினால் வேலை இழப்பு, தொழில் இழப்பு, வருமான இழப்புகளை சந்தித்துக் கொண்டிருக்கிறது. அந்நாட்டில் பொருளாதார எம்ஜென்சியாக அறிவித்துள்ளது பிசினஸ் பேக்கேஜ் பட்டியல் வெளியிட்டுள்ளது. வட்டியில்லா கடன் திட்டம் அறிவிப்பு, ஜூன் மாதம் கட்ட வேண்டியதை நிதியாண்டின் இறுதி வரை கட்டலாம், தனியார் நிறுவன ஊழியர்கள் 80% சம்பளத்தை அரசே ஏற்றுக்கொள்ளும், சுற்றுலா, ஓய்வு விடுதி, வணிக சொத்துவரி சில மாதங்களுக்கு தள்ளுபடி என அறிவித்துள்ளது.

## சிங்கப்பூர்

இக்காலகட்டத்தில் தொழிலாளிக்கு கொடுக்கும் சம்பளத்தில் 20 சதவீதம் மானியம் பெறலாம். கம்பெனி வருமானவரி மூன்று மாதம் தள்ளி கட்டலாம். வைரஸ் பாதிக்கப்பட்ட ஓட்டல், உணவு கடைகள், சொத்துவரி ஒரு பகுதி தள்ளுபடி செய்துள்ளது.

## கனடா

இந்த நாட்டில் ஜிஎஸ்டி வரி தாக்கல் ஜூன் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சிறு வணிக நிறுவனங்களுக்கு அவர்கள் பெறும் சம்பளத்தில் 10 சதம் மானியமாக உதவித்தொகை வழங்கப்பட்டு உள்ளது. இந்த கொரோனா நோய் தொற்றுக்கு 107 பில்லியன் டாலர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலே சொன்ன நாடுகளில் இந்த நோய் தொற்றுக்கு நிவாரண நிதி பல்வேறு நாடுகளில் பல லட்சம் கோடி ஒதுக்கீடு செய்து நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் நமது இந்தியா உலகில் மக்கள் தொகையில் இரண்டாவது நாடாக இருக்கக் கூடிய நிலையில் இந்த கொரோனா நோய்த் தடுப்புக்கு ஒதுக்கீடு செய்திருக்கிற தொகை மிக சொற்பமே. அது மட்டுமல்ல இந்திய நாட்டில் முக்கிய பகுதியாக இருக்கக்கூடிய புலம்பெயர் தொழிலாளர்கள் தனது சொந்த ஊர் செல்வதற்கு பயணம் மேற்கொண்டால் அந்த ஏழை தொழிலாளியிடம் இரட்டிப்புக் கட்டணம் வசூல் செய்யப்படுவது மத்திய அரசு. இதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். ஆக உலகம் முழுவதும் மேலும் மேலும் கடும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு வருவது உழைப்பாளி மக்களே.

தோழர்களே, வரலாற்றை தீர்மானிப்பதில் மிகப் பெரும் பங்கை வகிப்பது பணமே. உழைப்பாளி மக்களின் உரிமைக்கும் சுதந்திரத்துக்கும் ஆகப் பெரும் அச்சுறுத்தலாக இருப்பது. உலகம் முழுவதும் நிலை நிறுத்தப்பட்டுள்ள ராணுவத்தை விட நியதிக்கும் உட்படாத வணிகமே என்றார் காரல் மார்க்ஸ். ஆம், அத்தகைய வணிகம் இன்று உழைப்பாளி மக்களின் ரத்தத்தை வியர்வையை உறிஞ்சி கொண்டிருக்கிறது.

கால் வயிற்று கஞ்சியுமில்லை
காலுக்குச் செருப்புமில்லை
பாலுக்கு உழைத்தோமடா
பசையற்றுப் போனோமடா தோழா

என்று இம்மண்ணில் பிறந்த தோழர் ஜீவா பாடியது போல் உழைப்பாளி மக்களின் நிலை மென்மேலும் வறுமையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. இத்தகைய நிலைக்கு காரணம் ஆட்சியாளரின் கொள்கைகளே.

இந்த ஆட்சியாளர்களின் மக்கள் விரோத, ஊழியர் விரோத நாசகர கொள்கைகளை எதிர்த்துப் போராடி உழைப்பாளி மக்களின் உரிமைகளை பாதுகாப்பது நம் போன்ற தொழிற்சங்கங்களின் அடிப்படை கடமை என்பது நாம் அறிந்ததே. அத்தகைய வலுமிக்க போராட்டங்களை நடத்த நாம் நமது கவனத்தை வலுப்படுத்துவோம். அதே வழியில் தொடர்வோம்.

நேரம் வரும் அப்பொழுது
எங்களது மௌனம்
மிக சக்தி வாய்ந்ததாக இருக்கும்
இன்று நீங்கள் எங்கள் குரலை நெறிப்பதைவிட...! ❖




Scanned with CamScanner

# போரிட்ட இரு தரப்பும் வெற்றியை கொண்டாடிய ஸ்பெயின், போர்ச்சுகீசிய படைகள் - மே 26

**1644** - போரிட்ட இரு தரப்புமே தாங்கள் வெற்றிபெற்றதாகக் கொண்டாடிய வினோத யுத்தம் ஸ்பெயினில் நடந்தது. 1640-லிருந்து 1668 வரை நடைபெற்ற போர்ச்சுகீசிய மீட்புப் போரின் ஒரு பகுதியாக இந்த யுத்தம் நடந்தது. 1580இல் போர்ச்சுகீசிய அரசில் வாரிசுக் குழப்பம் ஏற்பட்ட நிலையில், ஸ்பெயினின் ஹாப்ஸ்பர்க் வம்சம் போர்ச்சுகல் அதிகாரத்தைக் கைப்பற்றி, லைபீரிய ஒன்றியம் என்ற பெயரில் இரண்டு நாடுகளையும் இணைத்து ஆண்டு வந்தது. ஸ்பெயினின் மூன்றாம் ஃபிலிப் மன்னர் ஆட்சிக்கு வந்ததும் போர்ச்சுகீசிய வர்த்தகர்களுக்குக் கூடுதல் வரிகளை விதித்தார். ஸ்பெயின் அரசப் பதவிகளுக்கு போர்ச்சுகீசியர்கள் வரமுடியாமல் செய்தார். இதனால் போர்ச்சுகீசிய மீட்புப் போர் என்ற புரட்சி வெடித்தது.

**1644 - போரிட்ட இரு தரப்புமே தாங்கள் வெற்றிபெற்றதாகக் கொண்டாடிய வினோத யுத்தம் ஸ்பெயினில் நடந்தது. 1640-லிருந்து 1668 வரை நடைபெற்ற போர்ச்சுகீசிய மீட்புப் போரின் ஒரு பகுதியாக இந்த யுத்தம் நடந்தது.**

ஸ்பெயினின் மோண்ட்டிஜோ என்ற நகருக்கு அருகில் நடைபெற்ற இந்தக் குறிப்பிட்ட யுத்தத்தில், ஸ்பெயின் படையில் 4000 காலாட்படை 1700 குதிரைப்படை வீரர்களுடன் 2 பீரங்கிகளும் இருந்தன. போர்ச்சுகீசியப் படையில் 6000 காலாட்படை, 1100 குதிரைப்படை வீரர்களுடன் 6 பீரங்கிகள் இருந்தன. போர்ச்சுகீசியப் படையின் பீரங்கிகள் கடும் சேதத்தை விளைவிக்கத் தொடங்கிய நிலையில், வலுவான பதிலடி கொடுத்த ஸ்பானிய படைகள் போர்ச்சுகீசியப் படைக்குள் ஊடுருவிச் சிதறடித்தன.



போர்ச்சுகீசியர்கள் பீரங்கிகளை விட்டுவிட்டு ஓடிய நிலையில், ஸ்பானிய படைகள் வென்றுவிட்டதாகக் கருதிக் களிப்பிலிருந்தபோது, போர்ச்சுகீசியர்கள் பீரங்கிகளை மீண்டும் கைப்பற்றித் தாக்கத் தொடங்க, ஸ்பானியப் படைகள் சிதறி அருகிலிருந்த கானகத்துக்குள் ஓடி ஒளிந்தன. இரு தரப்பிலும் சுமார் 3000 பேர் வீதம் உயிரிழப்பும் காயங்களும் ஏற்பட்டன.

உண்மையில் போர்ச்சுகீசியப் படைகள் வென்றிருந்தாலும், மோண்ட்டிஜோவைத் தாண்டி போர்ச்சுகீசியப் படைகள் வராமல் தடுத்துவிட்டதால் தாங்கள் வெற்றி பெற்றதாக ஸ்பெயின் படைகளும் அறிவித்துக்கொண்டன. இரு நாடுகளுமே, தங்கள் தளபதிகளுக்கு விருதுகள் வழங்கி கவுரவித்தன. 28 ஆண்டுகள் போருக்குப்பின் 1668இல் ஏற்பட்ட லிஸ்பன் ஒப்பந்தத்தில் போர்ச்சுகீசிய முடியாட்சியை ஸ்பெயின் அங்கீகரித்தது.

- மு.பாஸ்கரன்



Scanned with CamScanner

# சிறகடிக்கட்டும் கனவுகள், சீறிப்பாயட்டும் கற்பனைகள்!

“சிந்தனை செய் மனமே, செய்தால் தீவினை அகன்றிடுமே'' என்றொரு சினிமா பாடல் உள்ளது. அதை “கற்பனை செய் மனமே, செய்தால் கனவுகள் உயிர்ப்பெறுமே'' என்று பாடினால் என்னவென்று தோன்றுகிறது. சிந்தனை செய் மனமே வரிகள் சொல்வது பகுத்தறிவு எனும் காரண காரிய அறிவைப்பற்றி. ஆனால் கற்பனை செய் மனமே சொல்வது வேறுவழிச் சிந்தனை அல்லது வேறுவழி அறிவைப்பற்றி.

ஒரு மருத்துவர், நோயின் அறிகுறிகளைக் கண்டு, ‘நோய் இதுதான்' என்று தீர்மானிக்கிறார். ஒரு வழக்கறிஞர் தன் வாதங்களை ஒன்றன்மேல் ஒன்றாக ஜோடித்து தன்னுடைய வழக்கின் வாதத்தை நிரூபிக்கிறார். ஒரு அரசியல்வாதி காரண காரியங்களைக் காட்டி ஆளும்கட்சியின் குறைகளை அரசியல் மேடைகளில் பொதுமக்களின் முன் வைக்கிறார். இவை அனைத்தும் காரண காரியம் காட்டும் அறிவுகளாகும். ஒரு இசைமேதையின் புதிய ராக ஆலாபனைகளைக் கேட்கும்போதோ, ஒரு விஞ்ஞானியின் புதிய கண்டுபிடிப்பை காணும்போதோ, ஒரு ஓவியனின் நவீன ஓவியத்தை ரசிக்கும்போதோ அவை அனைத்தும் புதிய அனுபவங்களாக இருப்பதை உணர்கிறோம். இவை காரண காரியம் காட்டும் அறிவுக்கு சம்பந்தப்படாத எண்ணங்களாக இருப்பதை பார்க்கிறோம். இவைதான் வேறுவழிச் சிந்தனைகள் எனப்படுகின்றன.

வேறுவழிச் சிந்தனைகளுக்கு கற்பனைத்திறம் அவசியம் என்கிறார்கள். முட்டையை செங்குத்தாக நிற்க வைக்க முடியுமா? என்று கொலம்பஸ் கேட்டதாக ஒரு கதை உண்டு. எல்லோரும் முட்டை எப்படிச் செங்குத்தாக நிற்கும் என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது, முட்டையின் அடிப்பாகத்தை ஒரு தட்டுத்தட்டி அதை நிற்க வைத்தாராம் கொலம்பஸ். முட்டை எப்படி செங்குத்தாக நிற்கும் என்று காரண காரியம் தேடுவது நேரடிச் சிந்தனை. அடியில் ஒரு தட்டுதட்டி உட்கார வைப்பது வேறுவழிச்சிந்தனை.

ஒரு பெரியவர் மாலை நேரத்தில் நடைபயிற்சியை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தபோது அவருயை



**குதிரையில்லாத வண்டி ஓடும் என்று கற்பனை செய்து காரைக் கண்டு பிடித்தவனையும், பறவையை கண்டு விமானத்தை உருவாக்கியவனையும், வெவ்வேறு இடங்களில் இருப்பவர்கள் பேசிக்கொள்ள தொலைபேசியை கண்டுபிடித்தவனின் கற்பனையையும் யோசித்துப் பார்த்தால் மலைப்பாகத்தான் இருக்கிறது**



Scanned with CamScanner

பேத்தி காகிதத்தில் எதையோ வரைந்து கொண்டிருப்பதைப் பார்த்து, 'என்னம்மா வரைகிறாய்?' என்று கேட்டார். கடவுளை வரைவதாகக் கூறினாள் அச்சிறுமி. அதற்கு அந்தப் பெரியவர் 'ஆனால் கடவுள் எப்படி இருப்பார்னு யாருக்கும் தெரியாதே?' என்று கூற, அந்த சிறுபெண், 'நான் படம் வரைஞ்சு முடிஞ்சதும் அது தெரிஞ்சுடும் தாத்தா' என்றாள் அவள்.

மேற்கண்ட சம்பவத்தில் 'கடவுள் எப்படி இருப்பார்னு யாருக்கும் தெரியாதே' என்று பெரியவர் கூறியது காரண காரிய அறிவு. ஆனால் அதற்கு அந்தச் சிறுமி தந்த பதில், கற்பனையின் வேறுவழிச் சிந்தனை. கடவுள் எப்படி இருப்பார் என்ற ஒரு கற்பனையை அவள் வைத்திருந்ததும் அந்த கற்பனையின்மேல் அவள் திட நம்பிக்கை கொண்டிருந்ததும் அவளுடைய பதிலிலிருந்து பளிச்சிடும் உண்மை.

இன்று நாம் காணும் அறிவியல் கண்டுபிடிப்புகள் அத்தனையும் பலபேர் செய்த கற்பனைகள். அவர்கள் கற்பனை செய்து விட்டு அவற்றை அப்படியே விட்டுவிடவில்லை. கற்பனைகளை நிகழ வேண்டிய சம்பவங்களாக மனதில் விரித்துவிட்டு விடைக்காக அதே சிந்தனையில் உழன்றவர்கள். கல்லை முதலில் சக்கரமாக அமைத்தவனின் கற்பனையை எண்ணிப்பார்த்தால் ஆச்சர்யம்தான் மேலிடுகிறது. அகப்பட்டதை பறித்துத் திண்பதற்கு பதிலாக பயிரிட்டு அறுவடை செய்தவனின் கற்பனையை என்னென்று சொல்வது? குதிரையில்லாத வண்டி ஓடும் என்று கற்பனை செய்து காரைக் கண்டு பிடித்தவனையும், பறவையை கண்டு விமானத்தை உருவாக்கியவனையும், வெவ்வேறு இடங்களில் இருப்பவர்கள் பேசிக்கொள்ள தொலைபேசியை கண்டுபிடித்தவனின் கற்பனையையும் யோசித்துப் பார்த்தால் மலைப்பாகத்தான் இருக்கிறது.

ரோவே என்ற அமெரிக்கர் கை, கால் முடக்கப்பட்டவர். அவரது மனைவி ஊசி நூலால் துணி தைப்பவர். தனது மனைவி ஊசியைக் கொண்டு கைகளால் துணி தைப்பதைப் பார்த்த அவருக்கு இதை ஒரு இயந்திரத்தின் மூலம் செய்தால் எவ்வளவு நேரம் குறையும் என்று எண்ணினார். எப்படியாவது துணி தைக்கும் இயந்திரம் கண்டுபிடித்துவிட வேண்டும் என்று உறுதிபூண்டார். தன்னுடைய கற்பனையை நிஜமாக்க சிறிய ரக மோட்டார், அதை பொறுத்துவதற்கான பலகை துணி தைப்பதற்கான இடம் என்று எல்லாவற்றையும் வரையறை செய்துவிட்ட அவருக்கு பெரிய பிரச்னையாக இருந்தது ஊசியை இயந்திரத்துடன் நிரந்தரமாக இணைத்தவண்ணம் துணி தைக்குமாறு செய்வது எப்படி என்பதுதான். நாம் கையால் துணி தைக்கும் ஊசியின் காது ஊசியின் மேல்கோடியில் இருக்கிறது. அது துணிக்குள் முழுவதும் புகுந்து வெளிவருகிறது. ஆனால் இயந்திரத்தில் அப்படிச் செய்வது சாத்தியமில்லை என்பதால் அவரது முயற்சி தடைபட்டது. தினம் தினம் அதைப்பற்றி சிந்தித்து சிந்தித்து மண்டையைப் போட்டு பிய்த்துக்கொண்டார். அதைப்பற்றிய சிந்தனையோடே ஒரு நாள் தூங்கிக் கொண்டிருந்தபோது அவர் கனவில் ஆப்பிரிக்க காடுகளில் வாழும் மாமிச பட்சணிகள் அவரைச் சுற்றி நடமாடுகிறார்கள். அவர்கள் கைகளில் ஈட்டிகள் இருக்கின்றன.

காட்டுவாசிகளின் தலைவன், "இன்னும் 24 மணி நேரத்தில் நீ தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்துவிட வேண்டும், இல்லாவிட்டால் உன்னைச் சாப்பிட்டு விடுவோம்" என்று ஈட்டியை ஓங்கிக் காட்டி கூறினான். அந்த ஈட்டியை உற்றுப்பார்த்த ரோவே அந்த ஈட்டியின் முனையில் ஓர் ஓட்டை இருப்பதைப் பார்த்தார். "இது என்ன ஈட்டி வித்தியாசமாக இருக்கிறதே. ஈட்டியின் முனையில் ஏன் ஓட்டை போட்டிருக்கிறீர்கள்" என்று கேட்கவும் அவர் மனைவி வந்து அவரை சாப்பாட்டிற்காக எழுப்பவும் சரியாக இருந்தது. சாப்பிட்டுக்கொண்டே தனக்கு வந்த கனவையும் ஈட்டியின் முனையில் இருந்த ஓட்டையைப் பற்றியும் சிந்திக்க ஆரம்பித்தார். ஈட்டி துணி தைக்கும் ஊசியாக மாறி, தைக்கும் ஊசியின் அடிக்கோடியில் ஓர் ஓட்டை அவர் மனக்கண்களில் தெரிந்தது. சாப்பாட்டை பாதியில் நிறுத்திவிட்டு புதிய தையல் இயந்திர ஊசியை தயாரிக்க ஓடினார். அவர் செய்த ஊசி துணியைத் தைத்தது. உலகிற்கு தையல் இயந்திரம் கிடைத்தது. தையல் இயந்திரம் கண்டுபிடிக்க வேண்டும் என்ற ரோவேவின் கனவு, அவர் கனவு கண்டதால் மட்டுமே நிகழ்ந்துவிடவில்லை. அதை எப்படியும் கண்டுபிடித்தே தீர வேண்டும் என்ற உறுதியும், இடைவிடா முயற்சியும்தான் அதை நிஜமாக்கியது.

கற்பனை என்பது என்ன? இல்லாத ஒன்றை மனதில் படமாகக் காண்பது. கண்டுபிடிப்பு என்பது என்ன? அதை நிகழ்வாக மாற்றுவது. மனிதகுலத்திற்கான தேவைகளை அடைய ரோவே போன்ற பல மனிதர்கள் கண்ட எதிர்காலத்தைப் பற்றிய கற்பனைகள்தான் இன்று நாம் அனுபவிக்கும் அனைத்துப் பொருட்களும், அறிவியல் தொழில்நுட்பங்களும். டாக்டர் அப்துல்கலாம் சொல்கிறார், 'கனவு காணுங்கள். அந்தக் கனவுகள் நிறைவேற கண் விழித்திருங்கள்' என்று. கனவு ஏன் காண வேண்டும்? கற்பனை ஏன் நிகழ வேண்டும்? கனவு காணும் போதும், கற்பனை செய்யும்போதும் மனிதமனம் சகஜமாக எல்லைகளை மீறிவிட முடிகிறது. முடியாது என்று நடைமுறையில் தடைபடுத்தப்பட்டிருந்த விஷயங்கள் எல்லாம் கனவுகளால் உடைக்கப்பட்டு முடியும் விஷயங்களாக கற்பனையில் காணமுடிகிறது. அந்தக் கற்பனையின் மீது நாம் வைக்கும் நம்பிக்கையும், உறுதியும், இடைவிடாத உழைப்பும் நாம் கண்ட கனவை நிஜமாக்குகிறது. "கனவு மெய்ப்பட வேண்டும்,



Scanned with CamScanner

கைவசமாவது விரைவில் வேண்டும்'' என்று பாடும் பாரதி அந்தப் பாடலின் ஆரம்பத்தை "மனதில் உறுதி வேண்டும்'' என்ற வார்த்தைகளோடு தொடங்குகிறார்.

குழந்தைகளின் கற்பனைகள் அபாரமானவை. என்றாலும் அவற்றை நாம் ஒரு பொம்மை விளையாட்டாகவே பார்க்கிறோம். எழுத்தாளர்களின் கற்பனையை கதைகளாகவும் சினிமாக்களாகவும் ரசிக்கிறோம். நாட்டுத் தலைவர்களின் எதிர்காலக் கற்பனையை தீர்க்க தரிசனம் என்கிறோம். எழுத்தாளன் தன் கற்பனைகளின் மூலம் பிறர் மனதில் உணர்ச்சிகளை எழுப்ப வேண்டும் என்று எண்ணுகிறான். ஒரு தலைவனோ தன் கற்பனையில் நாட்டின் எதிர்காலத்தைக் காண்கிறான், அதை அப்படியே உருவாக்குகிறான். கற்பனையை எந்த அளவுக்கு நாம் நம்புகிறோம் என்பதைப் பொறுத்தே அதன் விளைவுகளும் அதை எத்தகைய கருவிகளாக உபயோகிக்கிறோம் என்பதைப் பொறுத்தே அதன் பலன்களும் அமைகின்றன.

கற்பனை மிகுந்த தலைவர்களுக்கும் கற்பனையில்லாத தலைவர்களுக்கும் உள்ள வேறுபாட்டை நாம் எளிதில் காணமுடியும். கற்பனை மிகுந்த மேதைகளாலேயே நமது உலகம் இவ்வளவு முன்னேறி வந்துள்ளது. நாம்கூட கற்பனை செய்திருக்க முடியாத ஒன்று, வெவ்வேறு துறைகளில் பணிபுரியும் அரசு ஊழியர்களை ஒன்றிணைப்பதன் மூலம் எல்லா அரசு ஊழியர்களின் உரிமைகளையும் பாதுகாக்க முடியும் என்று கற்பனை செய்த இந்த இயக்கத்தின் ஆசான் தோழர் எம்.ஆர்.அப்பன் அவர்களின் மாற்றுச்சிந்தனை, அந்த மாற்றுச் சிந்தனைதான் 'தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்' என்ற அனைத்துத் துறை ஊழியர்களுக்கான வலிமைமிக்கதொரு பொதுசங்கத்தை பல இடர்பாடுகளைக் கடந்து தோற்றுவித்த வரலாறு. தோழர் எம்.ஆர்.ஏ. தன் கனவை அதோடு நிறுத்திவிடவில்லை. அந்தச் சங்கத்திற்கு ஒரு தனிப்பட்ட ஒரு இடம் வாங்கி அதில் கட்டிடம் கட்டி எல்லா அரசு ஊழியர்களுக்குமான மையமாக மாற்றிட வேண்டும் என்று கனவு கண்டபோது அவருடன் இருந்தவர்களுக்குக்கூட அது மலைப்பான விஷயமாக தோன்றியது. ஆனால் எல்லா இடர்ப்பாடுகளையும் தாண்டி தமிழ்நாட்டில் அனைத்துத் துறைகளில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு என்று ஒரு கட்டிடம் கட்டி இன்று அது எல்லா தொழிற்சங்கங்களுக்கும், இயக்கங்களுக்கும் ஒரு முன்னோடியாக, முன்னுதாரணமாக விளங்குகிறது என்றால் அவரின் கனவு அத்தனை வல்லமை படைத்தது. இன்று அரசு ஊழியர்களின் உரிமைகளை காக்கின்ற ஒரு பேரியக்கமாக, அரசாங்கம் அரசு ஊழியர்கள் மீது தொடுக்கும் அடக்குமுறைகளை எதிர்த்து நிற்கும் இயக்கமாக, உரிமைகள் பறிக்கப்படும் போது அதற்காக முதல் குரல் கொடுக்கும் முன்னோடி சங்கமாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் விளங்குகிறது.

இன்று அரசு ஊழியர்கள் மட்டுமல்ல, ஏழைகள், விவசாயிகள், தொழிலாளிகள் என உழைக்கும் வர்க்கத்தினர் அவைருக்கும் எதிராகவும், இந்த வர்க்கத்தினரின் ரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் மூட்டைப் பூச்சிகளாக பெரு முதலாளிகளும், அவர் தம் கார்ப்பரேட் தலைமைகளும், முதலாளிகளின் எலும்புத்துண்டுகளுக்காக அலையும் நாய்களும் அவர்தம் ராஜாங்கங்களும், எலும்புத்துண்டுகளை கடித்து ரத்தம் சிந்தும் நாய்களுக்கு ஒத்தடம் கொடுக்கும் அதிகாரவர்க்கங்களும் அவர்தம் அராஜகங்களும் அணிவகுக்கும் நிலையில், இவர்களின் அடக்குமுறைகளை பொடிப்பொடியாக்கி எல்லோர்க்கும் எல்லாமும் சமமாய் கிடைக்கும் சமதர்ம சமுதாயத்தைப் படைக்கும் கனவுகளை நாம் காணவேண்டியுள்ளது. அதற்கான கற்பனைகளை பூணவேண்டியுள்ளது. அதற்காக தொடர்ந்து உறுதியோடு செயல்பட வேண்டிய அவசியமுள்ளது. நாம் காணும் சமதர்ம சமுதாயத்தை அடையும் கனவுகளுக்கும் கற்பனைகளுக்கும் யாரும் தடைபோட முடியாது. எனவே தோழர்களே, சீறிப்பாயட்டும் கற்பனைக் குதிரைகள். சிறகடிக்கட்டும் சிந்தனைகள். எல்லோருக்கும் எல்லாமும் பெற நம்மால் வழி பிறக்கட்டும்.

-ஜிஜி

## இரங்கல்



தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் பெரம்பலூர் மாவட்ட இணை செயலாளர் சித்ரா அவர்களின் புதல்வி சிவகங்கை மாவட்டத்தில் மருத்துவ படிப்பு முடித்துவிட்டு சிவகங்கை மருத்துவமனையில் பயிற்சி டாக்டராக த.அகிலா பணியாற்றி வந்த சமயத்தில் வாகன விபத்து ஏற்பட்டு சிவகங்கை மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தேரிவித்துக் கொள்கிறோம்.



Scanned with CamScanner

## இந்தியாவில் "சுகாதாரம்"

# ஏட்டுச்சுரைக்காய் ஆன அவலம்

பணம் தருவதற்கு முடியவில்லை என்பதன் பேரால் ஒருவருக்குக்கூட ஆரோக்கியப் பாதுகாப்பு மறுக்கக்கூடாது" என்று அறிவித்த போரே கமிட்டியின் அறிக்கையைச் சுதந்திரத்திற்கு முன்பு அங்கீகரித்த நாடுதான் இந்தியா. சுதந்திரத்திற்கு பின்னர் இந்தியாவில் ஏராள மான கமிஷன்கள் அமைக்கப்பட்டுவிட்டன. 'அனைவருக்கும் ஆரோக்கியம்' என்ற முழக்கம் எழுப்பிய உலக சுகாதாரக் குழுவின் 1978-ஆம் ஆண்டு அல்மாட்டி மாநாட்டின் அறிவிப்பில் இந்தியாவும் கூட்டுச் சேர்ந்திருந்தது. இதை அமல்படுத்துவதில் அரசுக்கு முக்கியப் பொறுப்பு உண்டு என்றும் அறிவித்தது. இதன் தொடர்ச்சியாக 1983-ல் சுதந்திர இந்தியாவின் முதலாவது சுகாதாரக் கொள்கை அறிவிக்கப் பட்டது. அரசின் முன்முயற்சியுள்ள ஏற்பாடுகள் மூலமாக 2000-மாவது ஆண்டில் அனைவருக்கும் ஆரோக்கியம் என்கிற இலட்சியம் நிறைவேறும் என்று அறிவிக்கப்பட்டது. சுகாதாரம் சார்ந்த எல்லா அறிவிப்புகளும் ஏட்டுச்சுரைக்காய் ஆனது.

1990-ல் உலக சுகாதார நிறுவனம் 'ஆரோக்கியத் துறையில் முதலீடு செய்யுங்கள்' என்ற அறிவிப் புடன் தாராளமயத்தின் நகலை அறிவித்தது. சமுதாய ரீதியான உற்பத்திப் பொருளிலிருந்து விலைக் கொடுத்து வாங்க வேண்டிய சரக்காக ஆரோக்கியப் பாதுகாப்பை மாற்றியது. அரசு வாபஸ் பெறுவதுடன் தனியார் மூலதனத்திற்கு வசதிகள் ஏற்படுத்துகிற புதிய உத்தரவாதம் செய்ய வேண்டு மென்று அறிவித்தது. அரசு ஏற்பாடுகள் பயனுள்ளதாக இல்லையென்ற பிரச்சாரம் தீவிரமடைந்தது. இருப்பினும் தனியார் துறையின் வாய்ப்பைப் அது உயர்த்திக் காட்டியது. இதன் தொடர்ச்சியாக 2002-லும், 2017-லும் மத்திய அரசின் சுகாதாரக் கொள்கை இதை நடைமுறைப் படுத்துவதற்கான சூழலை உருவாக்கியது. மருத்துவ மனையை ஒரு தொழிலாக அறிவித்தது. நூறு சதவீத அந்நிய மூலதனத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டதோடு மருந்துக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. காப்புரிமை சட்டம் திருத்தி எழுதப்பட்டு தனியார் துறைகளுக்கு சாதகமாக மானியங்கள் வழங்கப்பட்டன. தாராள விதிகளுடன் கடன் வழங்குவதை உறுதி செய்கிற கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு பொதுசுகாதாரத் துறைக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டது. இன்சூரன்ஸ் ஏற்பாடுகள் தனியார் துறையை வலுப்படுத்துவதற்கான கருவிகளாயின. மொத்த சமூகத்தையும் காணாத கொள்கை என்ன மாற்றத்தை ஏற்படுத்தியது என்று சிலர் இப்போது மறு சிந்தனை செய்கிறார்கள்.

2019-ல் உலக வறுமைக் குறியீட்டு எண்ணின் படி 117 நாடுகளில் 102-வது இடத்தில் இந்தியா உள்ளது. 6 மாதத்திற்கும் 23 மாதத்திற்கு மிடையிலான வயதுக் குழந்தைகளில் 9.6 சதவீதக் குழந்தைகளுக்கு மட்டுமே ஆரோக்கிய அளவீட் டின்படி ஊட்டச்சத்து உணவு கிடைக்கிறது. 2019-ஆம் ஆண்டின் ஆக்ஸ்பாம் அறிக்கையின்படி 119 பெரும் கோடீஸ்வரர்கள் உள்ள இந்திய நாட்டில் தான் இந்த நிலைமை. தனி நபர்களுக்கும் கார்ப்பரேட்டுகளுக்கும் செல்வத்தை அள்ளித் தருகிற கொள்கை ஏற்றத்தாழ்வை அதிகப்படுத்து கிறது. பெரும் கோடீஸ்வரர்களின் சொத்து மதிப்பு இந்தியாவின் பட்ஜெட்டை விடப்பெரிது. ஜவுளி ஆலையின் உயர் நிர்வாகிக்கு இப்போது கிடைக்கிற சம்பளம் சாதாரண தொழிலாளிக்குக் கிடைக்க வேண்டுமென்றால் அந்தத் தொழிலாளி 941 ஆண்டுகள் காத்திருக்க வேண்டிவரும்! எடைக்குறைவினால் மரணமடைகிற கர்ப்பிணி களின் எண்ணிக்கையிலும் அவமானமான இடத்தையே இந்தியா தொடர்கிறது. கையில் பணம் இல்லாத காரணத்தால் ஐந்தில் ஒருவர் தங்களுக்குச் சிகிச்சை வேண்டாம் என்று அவர்களே முடிவு செய்துக் கொள்கிறார்கள். நாட்டில் 16 சதவீத ஆரம்ப சுகாதார மையங்கள் மட்டும் தான் இந்தியத் தரத்திலாவது உள்ளன. சிறப்பான ஆரோக்கியம் கிடைப்பதில் உலகில் இந்தியா 145வது இடத்தில் உள்ளது. மறுபக்கம் தனியார் கார்ப்பரேட் மருத்துவமனைகள் அதிகரிக்கின்றன. சுகாதாரத் துறையில் ஒரு குடிமகனுக்கு - ஒரு குடிமகளுக்கு அரசாங்கம் ஒதுக்குவது ஆண்டுக்கு வெறும் 1112 ரூபாயாகும். இது, கார்ப்பரேட் மருத்துவமனை நிபுணத்துவ மருத்துவரின் ஒருமுறை கன்சல்டேஷன் ஃபீஸ் மட்டுமே! சந்தை ராஜாவாகத் தொடருகிற கொள்கைகள் - ஆரோக்கியத்தை ஒரு சரக்காகக் காணுகிற கொள்கைகள் மாற வேண்டும்.

சமூகம் முழுமைக்கும் நன்மை செய்கிற கொள்கைக்காக விரிவான ஓர் ஒன்றுபட்ட நிலை பாட்டைப் பின்பற்ற வேண்டுமென்று இந்தக் கொரோனா ஆட்சியாளர்களுக்கு உணர்த்துகிறது.

- கோ.பழனியம்மாள்



Scanned with CamScanner

# அரசு ஊழியர் இயக்கமெனும் பேராயுதம் ஏந்துவோம்

குதிரைப்படைகளை ஏவினாய்
குண்டாந் தடிகளால் தாக்கினாய்
கோஷம் போட்ட எங்களின்
குரல்வளைகளை நெறித்தாய்
வேற்றுகிரக வாசியென நினைத்து - எங்களை
விதவிதமான தாக்கினாய்
முள் கம்பிவேலி அமைத்து
முரட்டுத்தனமாய் தாக்கினாய்
மண்டை உடைந்தது
உதிரம் கொட்டியது
போராடும் பெண்களின் மீது
விபச்சார வழக்கு என்றாய்
கர்பிணிகளை கூட
சிறையில் தள்ளி பழிதீர்த்தாய் - இது
எங்கள் உரிமைக்கான போராட்டம்
அரசு ஆடியது வெறியாட்டம்
போராடிப்பெற்ற உரிமைகளை
ஆளுகின்ற அரசாங்கம்
இறக்கமற்று பறிக்கும்போதெல்லாம்
உரிமைகளுக்காக போராடுகிறோம் - ஆம்
உரிமைகளை காக்க போராடுகிறோம்
வரலாற்று பிழைகண்ட
கூறுகெட்ட அரசே கேள்
தத்தி தத்தி விரல் பிடித்து நடக்க
புதிதாய் பிறந்த இயக்கமல்ல
கோடி கோடி மக்களை காக்க
தாடியுடன் பிறந்ததே எமதியக்கம்
உழைக்கும் வர்க்கத்தின்
உன்னத மாதமாம்
மே மாதம் ஆறாம் நாள்
அரசு ஊழியர்களின் காவலனாம்
உழைக்கும் மக்களின் சேவகனாம்
தோழர் எம்.ஆர்.அப்பன் சிந்தனையில்
உதித்தது எமதியக்கம்
தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கம்
எங்கள் பேரியக்கம்!
அரசாங்கமெனும் இயந்திரம் இயங்க
நிற்காது சுழலும் சக்கரம் நாங்கள்
இறக்கமின்றி எங்களிடம்
பறிக்கப்படும் உரிமைகளை
போராடிப்பெறும் வீரர்கள் - நாங்கள்
சமரசமற்ற போர்களத்தின் நாயகர்கள்
உரிமைகளை மீட்க போராடினால்
மக்களுக்கு எதிரியென்றீர்
மக்களின் உரிமைக்காக போராடினால்
அரசுக்கு எதிரியென்றீர் - எங்களை
திட்டமிட்டு வஞ்சித்தாலும்
துரோகிகளாய் மாறி
முதுகில் குத்தினாலும்
உங்களின் முகத்திரையையும்
ஒருநாள் கிழித்திடுவோம்
எருதின் ரணத்தை கொத்தும் காக்கைபோல்
எங்களின் உரிமைகளை
பறித்துக்கொண்டேயிருக்கும்
மத்திய மாநில அரசுகளே
உங்களை வீழ்த்த
சமூக நீதி கேட்டு போராடுவோம்
அரசின் கோட்டை கொத்தளங்கள்
அப்படியே இருக்கும் - ஆனால்
அதை ஆள நீங்கள்
மீள்வதில்லை திண்ணம்
ஆள்தூக்கி சட்டம் போட்டு
மக்களை ஏமாற்றும் உங்களை
மக்கள் தூக்கியெறியும் நாள்
வெகுதொலைவில் இல்லை
எந்நிலை வரினும்
தன்னிலைமாறா தோழர்களே! வீரர்களே!
வழிநெடுகிலும் விழுப்புண்களை சுமந்து
வீரவரலாறு படைத்தது நமதியக்கம்
இயந்திரத்தின் சக்கரத்தில்
இறுகப்பற்றிக்கொண்ட பற்களைபோல
இப்பேரியக்கத்தை இறுகப்பற்றிக்கொள்வோம்
நமதியக்கதினையே பேராயுதமாக்கி
இழந்த உரிமைகளை மீட்க
ஒற்றுமையுடன் களம்காண்போம்
அருமை ஆசான் எம்.ஆர்.அப்பனின்
கொள்களை கோஷங்களாக கொண்டு
இயக்கத்தின் கொடியை
நெஞ்சில் ஏந்தி
ஒருமனதுடன் உறுதியேற்போம்
ஒன்றுபடுவோம்! போராடுவோம்!
முன்னேறுவோம்!

- தெ. வாசுகி



Scanned with CamScanner

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க 37வது

# அமைப்பு தின விழா வாழ்த்துக்கள்!

தமிழ்நாட்டின் அரசு ஊழியர்கள், 1984 க்கு முன் ஊதியத்திலும், உரிமைகளிலும், இந்தியாவில் 17வது இடத்தில் இருந்தனர். தாங்கள், எங்கு இருக்கிறோம் என்பதை அறியாதவர்களாக, ஒரு உணர்ச்சியற்ற நிலையில், இருந்தனர். அந்தக் காலகட்டத்தில், அரசு ஊழியர், ஆசிரியர்களின் ஒட்டு மொத்த எண்ணிக்கையை கூறி, அனைவருக்கும் தானே தலைவர், என்று சொல்லி, தன் சொந்த நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான, திறமைமிகு உத்தியாக, பயன்படுத்திக் கொண்டிருந்தது, சங்க தலைமை. 1980 களில் நடந்த கருவூலத்துறை,மருத்துவத்துறை மற்றும் பல்வேறு துறைகளில் அச்சங்கங்கள் நடத்திய போராட்டத்தில் கிடைத்த வெற்றிகள் அரசு ஊழியர்கள் மத்தியில் எழுச்சியை ஊட்டியது. தொடர்ந்து நடந்த போராட்டங்களில் கருவூல போராட்டம், உதவி வேளாண்மை அலுவலர் போராட்டம் என்று, அத்தனை போராட்டங்களையும் முறியடிக்க தமிழக அரசு அடக்கு முறைகளாலும், அளவுகடந்த பொய் வழக்குகளாலும் சந்தித்தது. கை கொடுக்க வேண்டிய, அன்றைய சங்க தலைமை, கை பிசைந்து நின்றது. வக்கனையான வாய்ச்சொற்களால், ஆட்சியாளரை வணங்கியே, இழப்புகளை, மீட்டிடுவேன் என்று சபதம் செய்தது. சங்கத்தின் உள்ளே நடந்த, உயிர்த்துடிப்பு மிக்க விவாதங்களுக்கும், வார்த்தை மோதல்களுக்கும், பதில் இல்லை, என்பது மட்டுமல்ல; விவாதத்தில் ஈடுபட்ட மாவட்டங்கள், கலைக்கப்பட்டன. தலைமையின் ஊசலாட்டம், மற்றும் துணிச்சலற்ற அணுகுமுறை, ஆகியவற்றைக் கண்டு, சலிப்படைந்திருந்த, சாதாரண அரசு ஊழியர்கள், புதிய சங்கம் ஒன்றிற்காக,ஏங்கி நின்றனர். வீரச் செயல்கள் செய்ய, காத்திருப்போருக்கு, சங்கம் தேவைப்பட்டது.

## புதிய உதயம்

நெருக்கடிகளுக்கு நடுவில், ஊழியரின் உற்ற தோழனாக தோன்றியதுதான் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். 6.5.84ல், சங்கம் வளர்த்த மதுரையில், கொலையுண்ட கோவலனுக்கு, நீதி கேட்ட மதுரையில், பழி வாங்கல்களை துடைத்திட, நீதிகேட்டு சங்கம் கர ஒலிகளுக்கு நடுவே தொடங்கப்பட்டது. அதற்குப் பிறகு நடைபெற்ற அனைத்து இயக்கங்களும், வீறு நடைபோட்டு, வெற்றியை நோக்கி, நடக்கத் தொடங்கின. 1985இல் ஆசிரியர்கள், சிறை செல்லும் போராட்டம், நடத்தினர். தீபாவளி அன்று கூட வெளியில் விட மறுத்தது அரசு. ஆசிரியர் போராட்டத்தை, அனைத்து வட்டங்களிலும், அரசு ஊழியர் சங்கமே, முன்னின்று நடத்தியது. முதன்முதலில், போனஸ், ஏற்கப்பட்டது, இந்தப் போராட்டத்தில் தான். உடைக்க முடியாத, ஒற்றுமை ஏற்பட்டது. நம்பிக்கை வெளிச்சம், தோன்றியது.



Scanned with CamScanner

## வரலாற்று சிறப்புமிக்க 88 போராட்டம்

10.2.88 அன்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நடத்திய, ஒரு நாள் வேலை நிறுத்தம், அசையாத பகுதிகளை அசைத்தது. தொடர்ச்சியாக நடந்த, முப்பத்தியொரு நாள் வேலை நிறுத்தம் பெரும் வெற்றியாக மாறியது. ஒற்றுமை என்ற நங்கூரத்தால், போராட்டம் நிலைநிறுத்தப்பட்டது. கனவில் இருந்த மத்திய அரசு ஊதியம், நிஜமானது. 'வென்றிடுவோம் வாருங்கள்' என்று அழைத்தபோது, வர மறுத்த பல பகுதிகள், வென்ற பின்னர், அழைக்கும் முன்பே வந்து சேர்ந்தன. சங்கம், போராட்டத்தின்,

திசை வழியை மட்டும்தான் மாற்றும் என பலர் நினைத்தனர். ஆனால், ஒவ்வொருவர் வாழ்க்கையின் திசை வழியையே, மாற்றும் என்பதை அனுபவத்தில் உணர்ந்தனர், அரசு ஊழியர்கள். 1947 முதல் 1988 வரையிலான, தேக்க நிலையை உடைத்தது. அது மட்டுமல்ல, அரசின் அடக்குமுறைக் கருவிகளை, உறை நிலைக்குக் கொண்டு சென்று சேர்த்தது, மாபெரும் சாதனை.

## மாபெரும் அரசியல் சக்தி

தமிழகத்தின் மாபெரும் சமூக சக்தியாக, ஒரு தொழிற்சங்க சக்தியாக அரசு ஊழியர் சங்கம், பேருருக் கொண்டது. உருமாறியது. போராட்டங்கள், அரசு ஊழியர் ஆசிரியருக்கு மறு சிந்தனையை ஏற்படுத்தியது. ஒரு புதிய, முற்போக்கு எண்ணம் கொண்ட, போராட்ட இயக்கத்தின் தலைவர்களாக, ஒவ்வொருவரும், மாற்றம் அடைந்திருந்தனர். 2003ன் மிகப்பெரிய போராட்டம், 2016ல் தனித்து நின்று நடத்திய போராட்டம், 2017ல் தலைமைச் செயலாளரை கூண்டில் ஏற்றிய போராட்டம், 2019 போராட்டம், என்று, தமிழக போராட்டங்களின் வரலாறே, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க வரலாறு என்றாகியது. இன்றைக்கும், எல்லா அமைப்புக்களையும், முன்னோக்கி செலுத்தும் சிந்தனைகளின், உற்பத்திக் கலன்களாக, புதுமையும் பொலிவும், பொங்கி வழியும் அமைப்புகளாக, அரசு ஊழியர், ஆசிரியர், ஓய்வூதியர், அமைப்புக்கள் விளங்கி வருகின்றன.

## உறுதி ஏற்போம்

புதிய ஓய்வூதியம் இரத்து, இருபத்தி ஒரு மாத நிலுவை, இழந்துவிட்ட அகவிலைப்படி, ஆகிய கோரிக்கைகளுக்கான, போராட்டத்தை துவக்கிட, நமது தாயகத்தை தேசத்தை மதவெறியிலிருந்து சாதி வெறியிலிருந்து பாதுகாக்க கரோணாவில் கடுமையாக பாதிக்கப்பட்டு பட்டினி பசியில் பரிதவிக்கும் ஏழை எளியமக்களை பாதுகாக்க இந்த,

37ஆவது அரசு ஊழியர் சங்க அமைப்பு தினத்தில் உறிதியேற்போம்.

- **நெ.இல.சீதரன்,**
மாநிலத்தலைவர்

- **பி.கிருஷ்ணமூர்த்தி,**
பொதுச்செயலாளர்

தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை
ஓய்வூதியர் சங்கம்

# வான்மழையாய் தொடரும் செவிலியர் சேவை

ஆண்டில் அணிவகுக்கும் ஆயிரம் தினம்
தொண்டில் பொழுதளப்பவர்க்கு இன்றே தினம்

ஊதியம் குறைவே ஆயினும் நல்மனம்
உலகமே கைகூப்பும் செவிலியர் தினம்

உறவுகளும் தொடத் தயங்கும் காலமிது
இறவாத தூய தொண்டுள்ளம் செவிலியரது

கைதட்டிப் பயனிலை விளக்கேற்றிப் பயனிலை
மெய்யளித்து ஆற்றும் சேவைக்கு நிகரிலை

தொற்றால் தலைதெறிக்க ஓடும் நாளில்
பற்றால் செவிலியர் விலைமதிப்பாலா சேவையில்

சேவையில் வரலாறானது நைட்டிங்கேல் அன்று
பாரினில் எண்ணற்றோர் காவியமா யின்று

வானூர்தி பூமழை வேண்டாம் அவர்க்கு
தானாக அவருரிமை வழங்குவீர் அவர்க்கு

வான்மழையாய் தொடரும் செவிலியர் சேவை
வான்பரப்பாய் விரிப்போம் நன்றிப் பூவை

(உலக செவிலியர் தினம் மே12)

- பெரணமல்லூர் சேகரன்



Scanned with CamScanner

# நம் தோளின் மீது வரிக்கப்பட்டிருக்கும் தொழிற்சங்க கடமைகளுக்காக

# அமைப்பு தினத்தில் உறுதியேற்போம்!

நாம் நமது கொடிகளையும் பதாகைகளையும் தூக்கிப் பிடிப்பதற்கு முன் சில ஞாபகங்கள் வந்து போகின்றன. மே தினத் தியாகிகள் தூக்குமேடையில் முழக்கிய அந்த வார்த்தைகள் காதில் கேட்கிறது. "எங்களைத் தூக்கிலிடுவதன் மூலம் தொழிலாளர் இயக்கத்தை நசுக்கிவிடலாம் என்று நீங்கள் நினைத்தால்... லட்சக்கணக்கான ஒடுக்கப்பட்டோரும், துன்பங்களில் உழல்வோரும் விடுதலைக்காக எதிர்பார்த்திருக்கும் இயக்கத்தை நசுக்கிவிடலாம் என்று நினைத்தால்...இதுதான் உங்கள் எண்ணம் என்றால் எங்களைத் தூக்கிலிடுங்கள். இங்கு நீங்கள் ஒரு சிறு தீப்பொறியின் மீது கால் வைக்கிறீர்கள்...ஆனால் இங்கே, அங்கே... உங்களுக்கு முன்னால், பின்னால்...எங்கும் தீப்பந்தங்கள் ஒளிரும். இது நீறுபூத்த நெருப்பு... உலகம் முழுவதும் உழைப்பாளி மக்களுக்கு எதிரான அனைத்தையும் இது சுட்டுப் பொசுக்கும்" சிகாகோ நகரின் ஹப்பார்ட் தெரு காவல் நிலையத்திற்கு இடையில் உள்ள சந்தில்...நடைபாதையில் அமைக்கப்பட்டிருந்த தூக்குமேடையில் ஆகஸ்ட் ஸ்பைஸ், பிஷர், ஏங்கேல் மற்றும் பார்சன்ஸ் ஆகிய நால்வரும் எந்தவிதக் கவலையும் இன்றி நின்று கொண்டு பேசிய அந்தக் காட்சி கண்களில் விரிகிறது. "இன்று நீங்கள் நெறிக்கும் எங்கள் மௌனம் மிகவும் சக்தி வாய்ந்ததாக மாறும் காலம் வரும்." என்றார் ஸ்பைஸ். பிஷரும், ஏங்கேலும் அந்தத் தூக்குமேடையில் நின்றுகொண்டு "இதுதான் எங்கள் வாழ்க்கையின் மகிழ்ச்சியான தருணம்." என்றனர். கடைசியாக பார்சன்ஸ்,"ஓ அமெரிக்கர்களே...நான் பேச அனுமதிக்கப்படுவேனா? என்னைப் பேசவிடுங்கள்... மக்களின் குரல் கேட்கட்டும்." என்று கூறிய வார்த்தைகள் நேற்று கூறியதைப் போல் இருக்கிறது. 1887 நவம்பர் 11ஆம் தேதி உண்டான தீப்பொறி தீப்பந்தமாகி நூறு ஆண்டுகளுக்கும் மேலாக எரிந்து கொண்டிருக்கிறது. தூக்கு மேடையில் தோழர்கள் நால்வரும் தூக்கில் தொங்கிய நிகழ்வுக்குப் பிறகுதான் தொழிற்சங்க அமைப்புகளும், இயக்கங்களும் தோன்றலாயின.

இது நடந்து 130 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடி அவற்றில் சில உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள். உலகப் பெரும் பணக்காரர்களால் தொழிலாளர்களின் போராட்டங்கள் தொடர்கதையாகியுள்ளன. விலைமதிக்கத்தக்க உயிரையும், உதிரத்தையும் சிந்தி நம்முன்னோடித் தோழர்கள் பெற்றுத்தந்த உரிமைகள் அவ்வப்போது பறிக்கப்படுவதும், அவற்றை திரும்பப்பெற தொழிலாளர்கள் தொடர்ந்து போராடிக்கொண்டிருப்பதும் உலகநியதியாக மாறிவிட்டது. இன்றைய நிலையில் கொரோனா என்ற நோய்க்கிருமியால் உலக நாடுகள் அனைத்தும் ஆட்பட்டிருக்கும் நிலையிலும் தொழிலாளர்கள், உழைக்கும் வர்க்கம், தினக்கூலித்தொழிலாளர்கள் என அனைத்துத் தரப்பினர்மீதும் முதலாளிகள் உலகம் தங்கள் எதேச்சதிகாரத்தை ஏவி விட்டுள்ளன. இவர்களின் கைகூலிகளாக ஆளும் அரசாங்கங்கள் இருந்துவருவதோடு அவர்கள் எதிர்பார்ப்புக்கும் மேலாகவே அடிமைச் சேவகம் செய்து வருகின்றன.

கொரோனா நோய்த் தொற்று ஆபத்தின் சாமானிய மக்களின் அன்றாட வாழ்நிலை இன்று கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளன. மத்திய அரசினால் மூன்றாவது முறை அறிவிக்கப்பட்டுள்ள பொது முடக்க அறிவிப்பிலும் ஏழைகள், விவசாயிகள்,



Scanned with CamScanner

தொழிலாளர்கள், தினக்கூலிகள் போன்றோருக்கு நிவாரணம் குறித்த எந்த செய்தியும் இடம்பெறவில்லை. ஈரத்துணியை வயிற்றில் கட்டிக்கொண்டு இன்னும் 14 நாட்களுக்கு மூச்சைப் பிடித்து வைத்துக் கொள்ளுங்கள் என்று மத்திய அரசு இந்திய மக்கள் அனைவரையும் நேரடியாக கேட்டுக்கொள்ளவில்லையே தவிர பிரதமரின் பேச்சுரைகள் அனைத்தும் இப்படித்தான் இருந்தன இருக்கின்றன.

கோடானுகோடி தொழிலாளர்கள் நாளைய வாழ்வு எப்படி இருக்கும்என தெரியாமல் கதிகலங்கி நிற்கின்றனர். பெருமளவு வேலையிழப்புகள் இருக்கும் என்கிற அச்சம் அவர்களுள் உறைய ஆரம்பித்துவிட்டது. வேலையிழப்பு பிரச்சனை தொழிலாளர்கள், ஏழைகள், தினசரிக் கூலிகளை மட்டுமின்றி நடுத்தர வர்க்கத்தினரையும் நடுநடுங்க வைத்துக் கொண்டிருக்கிறது. கொரோனாவுக்கு முன்னமேயே இந்தியப் பொருளாதாரம் கடும் சரிவை சந்தித்துக் கொண்டிருந்த நிலையில் இப்போது அது இன்னும் படுமோசமாகியிருப்பதால் பெரும்பகுதி மக்களின் வாங்கும் சக்தி மேலும் குறைந்திருக்கிறது. சேமிப்பு என்பது இனிமேல் சாத்தியப்படுமா என்ற கேள்விக்குறி தொக்கி நிற்கிறது. மக்கள் உணவு உட்கொள்ளும் அளவை குறைத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்துள்ளது. தேவைகளுக்கான பொருட்கள் வாங்குவதும், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் வாங்குவதும் இன்று ஆகப்பெரிய காரியங்களாக மாறியுள்ளன.

உலகின் பல நாடுகளில் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க கார்ப்பரேட் நிறுவனங்கள் மீது கூடுதல் வரி போடுகிற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அதே நடைமுறைகளை இந்தியாவில் ஏன் மேற்கொள்ளக்கூடாது? என்று ஆலோசனைகளைக்கூறிய அதிகாரிகள் மீது அரசு கோபம் கொள்கிறது. வரி வருவாய் பிரதானமாக எங்கிருந்து வருகிறது யாருக்கு செலவழிக்கப்படுகிறது என்பதில்தான் ஒரு அரசாங்கம் யாருக்காக செயல்படுகிறது என்பதைக் காண முடியும். கார்ப்பரேட் பெருமுதலாளிகளக்கு பல லட்சம்கோடி ரூபாய் மக்கள் வரிப்பணத்தை வாரி வழங்கி பழக்கப்பட்ட மோடி அரசு, நெருக்கடி காலத்தில் அவர்களின் கொள்ளை லாபத்தில் சிறு பகுதியை எடுத்தால் என்ன என்று யோசனை கூறினாலே பதட்டம் அடைவது ஏன்? ஆலோசனைகள் வழங்கிய அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை பாய்கிறது. பாதிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிற ஏழை எளிய உழைப்பாளி மக்கள் சிறு குறு வியாபாரிகள் உள்ளிட்ட அனைத்துப் பகுதி மக்களையும் பாதுகாப்பதற்கான நிவாரண நடவகைக்கைகளை போர்க்கால அடிப்படையில் எடுக்க வேண்டிய மத்திய அரசு அதுபற்றி வாய்திறக்க மறுக்கிறது.

தற்போது பொது முடக்கத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடி 1930 மற்றும் 2008 பொருளாதாரச் சரிவை விட கடுமையானதாக இருக்கும் என்று பல பொருளாதார நிபுணர்கள் கணித்துள்ள நிலையில் இதன் சுமையையும் தொழிலாளர்களின் தலையில் ஏற்றுவதற்கான முயற்சியில் இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் ஈடுபட்டுள்ளன. நாட்டு மக்களுக்கு உணவு, சுகாதாரம், கல்வி, வேலை, ஓய்வூதியம் வழங்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசையே சாரும். அனைத்து வகையிலும் நிதி திரட்டும் அதிகாரத்தை மத்திய அரச தன் கையில் வைத்துக்கொண்டு மாநில அரசுகளை அதனிடம் கையேந்த வைக்கிறது. நான்கில் ஒருவருக்கு வேலையில்லாத நிலை இருக்கும்போது தொழிலாளர்களின் வேலை நேரத்தை கூட்டுவது அராஜகம். தொழிலாளர்களின் உழைப்பினால்தான் பிரமிக்கத்தக்க வளர்ச்சியை நம் நாடு கண்டுள்ளது. அவர்கள் தமக்குகுரிய கௌரவமான வேலையை தங்கள் உழைப்புக்குரிய நியாயமான ஊதியத்தைத் தான் கேட்கிறார்கள். அதைப் பெறுவதற்கான போராட்டத்தில் சாதியின் பெயரால் மதத்தின் பெயரால் ஆளும்கட்சியினரும், அதிகாரவர்க்கமும், கார்ப்பரேட்டுகளும் பிளவு முயற்சிகளை மேற்கொண்டு தொழிலாளிகள் மற்றும் உழைக்கும் மக்கள் ஒன்று திரண்டு நிற்பதை முறியடிக்கப் பார்க்கிறார்கள்.

*இந்தியாவில் பெரு முதலாளிகளின் எண்ணிக்கை வரலாறு காணாத அளவில் உயர்ந்திருக்கிறது. 2014 ஆம் ஆண்டு 1,82,000 பேராக இருந்த டாலர் மில்லியனர்கள், 2019ம் ஆண்டில் 7,59,000 பேராக உயர்ந்திருக்கிறார்கள். 2014ம் ஆண்டில் இந்தியாவில் உயர் நிலையிலுள்ள 1% பெரும் பணக்காரர்களின் சொத்து மதிப்பு, கீழ்நிலையிலுள்ள இந்தியர்களின் 49% பேரின் சொத்துக்கு இணையாக இருந்தது. இதுவே 2019ல் 1% பெரும் பணக்காரர்களின் சொத்து மதிப்பு, 70% இந்திய மக்களின், அதாவது ஏறத்தாழ 90 கோடி மக்களின் சொத்து மதிப்பைப் போல 4 மடங்கு அதிகமாக பெருத்திருக்கிறது, வீங்கியிருக்கிறது. 2017ம் ஆண்டில் இந்த 1% பேரின் சொத்து மதிப்பு மட்டும் ரூ.20,91,300 கோடி அதிகரித்திருக்கிறது, அதாவது உயர்வு மட்டும். இந்தத் தொகை மத்திய அரசின் 2017-18 ஆம் ஆண்டின் பட்ஜெட்டிற்கு இணையானது. இதேபோல, இந்தியாவில் 2018ம் ஆண்டு 63 உயர் பெரும் பணக்காரர்களின் சொத்து மதிப்பு மட்டும் 2018-19 ஆம் ஆண்டின் மத்திய*



Scanned with CamScanner

அரசின் பட்ஜெட் தொகை யான ரூ.24,42,200 கோடியை விட அதிகமாகும்.

ரிசர்வ் வங்கியின் தகவல்உயர் அதிகாரி மத்திய அரசு 68,607 கோடி ரூபாயை செப்டம்பர் 2019லேயே தள்ளுபடி செய்துவிட்டதான தகவல் வெளியிட்டிருக்கிறார். இது பற்றி 2020 பிப்ரவரியில் பாராளுமன்றத்தில் கேட்டதற்கு நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பதில் சொல்ல மறுத்திருக்கிறார். இதை ஒரு ஆர்.டி.ஐ மூலம் விசாரித்ததில் உண்மை அம்பலமாகி இருக்கிறது. பல ஆயிரம் கோடி ரூபாய் ஏமாற்றிய முகுல் சோக்சியின் (தற்போது இந்தியாவிலிருந்து தப்பி வெளிநாட்டில் இருக்கிறார்) கீதாஞ்சலி நிறுவனத்திற்கு 5, 492 கோடியும், அவரது பிற நிறுவனமான கிலி, நட்சத்திராவிற்கு ரூ1109 கோடி, சந்தீப் ஜுன்ஜின்வாலா, சஞ்சய் ஜுன்ஜின்வாலாவின் ரேய் அக்ரோவிற்கு ரூ4314 கோடி(இவர்கள் தேடப்படும் குற்றவாளிகள்), ஜத்தின் மேத்தாவிற்கு 4,076 கோடி ரூபாய் (இவர் சிபிஐயால் விசாரிக்கப்படுகிறவர்), ரோட்டோமேக் பேனா நிறுவனத்தின் கோத்தாரி குடும்பத்திற்கு 2850 கோடி ரூபாய், பாபா ராம் தேவ், பால்கிருஸ்சனின் ருச்சி சோயாவிற்கு 2212 கோடி ரூபாய், குவாலியரின் ஜீம் டெவலப்பர்ஸ் 2012 கோடி ரூபாய், அகமதாபாத்தின் ஹரிஷ் மேத்தாவின் வைர வியாபார நிறுவனத்திற்கான 1962 கோடி ரூபாய், இதுமட்டுமல்லாமல் விஜய் மல்லாயாவிற்கு 1943 கோடி ரூபாய் என பட்டியல் நீளமானது. இதில் அதிகமாக வைர வியாபாரிகள். பெரும்பாலோனோர் தேடப்படும் குற்றவாளிகள். இதுதான் இன்றைய இந்தியா.

ஊரடங்கு எத்தனை நாள் தொடருமோ? மீண்டும் வேலை கிடைக்குமா? சம்பளம் கிடைக்குமா? எனத் தொழிலாளிகளும் ஏழை எளிய மக்களும் பெரும் கவலையில் உள்ளனர். மூடப்பட்ட தொழில் நிறுவனங்கள் எப்படி இயல்பு நிலைக்குத் திரும்பப் போகிறது என்பது தெரியவில்லை? ஊரடங்கால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள ஏழை, எளிய மக்களுக்கு போதிய நிவாரணம் வழங்கு என்று கேட்டால் கோரிக்கை வலுத்து வரும் நிலையில் கார்ப்பரேட்டுகள் மீது வரிபோடுவதற்குப் பதில் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களின் சம்பளத்திலும் ஓய்வூதியர்களின் அக விலைப்படியிலும் கைவைத்துள்ளனர். கார்ப்பரேட் முதலாளிகள் மீது ஒரு விழுக்காடு செல்வவரி போட்டால் கூட பல்லாயிரம் கோடி ரூபாய் அரசுக்கு கிடைக்கும். இதைச்செய்யாமல் பொதுத்துறை வங்கிகளைச் சூறையாடிய கொள்ளையர்களைக் காப்பாற்றுவதில் தான் மத்திய அரசு கவனம் செலுத்தியிருக்கிறது. இதிலிருந்த இந்த அரசாங்கம் உழைக்கும் மற்றும் சாமானிய மக்களின் மீது எந்தவித அக்கறையும் கொள்ளவில்லை என்பதும் அவர்களை ஒரு பொருட்டாகக்கூட மதிக்கவில்லை என்பதும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

தொழில்நுட்பம் நன்கு வளர்ந்து விட்டது. ஆனால் உலகமய, தாராளமய, தனியார்மய கொள்கைகள், தொழில்நுட்பத்தின் பலனை, உழைப்பாளிகளுக்கு வழங்காமல், ஆட்குறைப்பு செய்து, வேலையில்லா திண்டாட்டமாக, மாற்றி விட்டது. உலகமயக் கொள்கைகளால், உலகம் முழுவதும் வலது சாரிக் கொள்கைகள் திட்டமிட்டு, வளர்க்கப்பட்டு, வருகின்றன. உலகமயக் கொள்கையின் தவறுகள், கொரானாவின் வீச்சில், பளிச்சென்று தெரிகின்றன. சோசலிச நாடுகளில், அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமும், சுகாதாரமும், மக்களைக் காப்பாற்றி விட்டன. இத்தாலி, அமெரிக்கா போன்ற முதலாளித்துவ நாடுகளில், தனியார்மய கொள்கைக்கு கொடுத்த முக்கியத்துவம், மனித உயிர்களை, மலினமாக்கி விட்டன. பளபளப்பான, கண்ணாடிக் குடுவையாக, விளங்கிய அமெரிக்காவுக்கு இன்று இதுதான்டா வாழ்க்கை என்று பாடம் சொல்லியிருக்கிறது கொரோனா வைரஸ்.

தொடர் ஊரடங்கின் விளைவாக இந்தியாவில் 40 கோடித் தொழிலாளர்கள் கடும் வறுமையில் சிக்குவார்கள் என்றுஎச்சரித்துள்ளது சர்வேதேச தொழிலாளர் அமைப்பு (ஐஎல்ஓ). இந்தியத் தொழிலாளர்களில் 90% அமைப்புசாராத துறைகளில்தான்வேலை செய்கின்றனர். இவர்கள் சுமார் 40 கோடிக்கும் மேல். இந்த நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் கிட்டத்தட்ட 19.5கோடிப் பேர் முழு நேர வேலையை இழக்கக்கூடும். ஆட்குறைப்பு, வேலைநேர அதிகரிப்பு, ஊதிய வெட்டு ஆகியவற்றின் மூலம் இழப்புகளைச் சரிக்கட்ட நிர்வாகங்கள் முயலும். இந்த நிலையிலிருந்து தொழிலாளர்களைக் காக்க நான்கு அம்சநடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்கிறது ஐஎல்ஓ.

முதலாவது, தொழில் நிறுவனங்கள், வேலைவாய்ப்பு, வருவாய் ஆகியவை



Scanned with CamScanner

குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இரண்டாவதாக, பொருளாதாரத்தையும் வேலை வாய்ப்புகளையும் பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மூன்றாவதாக, பணியிடங்களில் தொழிலாளர்களின் நலன், உயிர், உரிமைகள் ஆகியவற்றைப் பாதுகாக்கத் தனி கவனம் செலுத்தவேண்டும். நான்காவதாக, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசு, தொழிலாளர்கள், நிறுவன உரிமையாளர்கள் இடையே முத்தரப்புஆலோசனைகளும் பேச்சுகளும் நடைபெற வேண்டும்.

நோய்த்தொற்று ஏற்பட்டுள்ள தற்போதைய தருணம், நாம் அனைவரும் ஒன்றுபடுவதற்கான தருணமாகும். புதிய தேச ஒற்றுமையை கட்டுவதே இத்தொற்று நோய்க்கான உண்மையான இறுதியான அருமருந்தாகும். அரசின் உள்ளார்ந்த ஆதரவுடன் இந்நோய்தொற்றுக்கு மதச்சாயம் பூசுவது, மனித உரிமைகளுக்காகவும், உபா சட்டத்தின் (யுஏபி - பயங்கரவாதச் செயல்கள் தடுப்புச் சட்டம்) கீழ் நிறைவேற்றப்படும் குடியுரிமைத் திருத்தச் சட்டம் போன்ற கொடூரமான சட்டங்களுக்கு எதிராகப் போராடுபவர்களையும் சிறையிலடைப்பது, அரசை விமர்சிக்கும் பத்திரிகையாளர்களைத் தாக்குவதன் மூலம் பத்திரிகை சுதந்திரத்தை தாக்குவது என்பன எல்லாம் எதேச்சதிகார நிகழ்ச்சிநிரலின் அங்கமே ஆகும். இவையெல்லாம் தற்போதைய தருணத்தில் அல்லது எந்தவொரு தருணத்திலும் தேவைப்படுகிறவற்றிற்கு நேரெதிரான நடவடிக்கைகளே ஆகும். இருந்தபோதும், ஊரடங்கு நிலை என்ற போர்வையில் இவை எல்லாம் மூடி மறைக்கப்படுகின்றன. இவை எல்லாம் மாற்றப்படவில்லை என்றால், நமது நாடும், நாட்டு மக்களும் இந்நோய்த் தொற்றை எதிர்த்து வலுவாகப் போராட இயலாது.

தொழிற்சங்கங்கள் நிலை தெளிவானது. முரண்கள் ஏதுமில்லா அணுகுமுறை. தீர்வு குறித்த தெளிவு, காலம் எதிர்பார்க்கிற கடப்பாடு, மக்கள் மீது அக்கறை, தொழிற்சங்க உரிமை... ஆகிய கோட்பாடுகளில் உறுதியாக நின்றே இப் பிரச்சினையை அணுகுகின்றன. மாநிலத்திற்கு மாநிலம் ஒரு நிலை என்பது இல்லை. ஒரே உறுதியான நிலைதான் எல்லா மாநிலங்களிலும்.

ஆகவே கொரோனா தொற்று ஏற்பட்டுள்ள இந்த் இக்கட்டான சூழ்நிலையில் நம்முன் இருபெரும் கடமைகள் உள்ளன. உழைக்கும் மக்களுக்கு உண்டானதை வழங்காமல் அதைச் சுரண்டி தின்று கொழுத்திருக்கும் ஆதிக்க சமுதாயத்தை அடித்து வீழ்த்தும் வல்லமையும் ஒருமைப்பாடும், உழைக்கும் மக்களுக்கான உரிமைகளை காப்பதுவும் இழந்த உரிமைகளை மீட்பதுவுமான வலிமையான போராட்டங்களும் உறுதிப்பாடுகளும் இன்றைய இன்றியமையாதத் தேவைகளாகியுள்ளன.

மக்களை ஒருமுகப்படுத்தி நேர்மையான, நியாயமான உரிமைகளுக்காக அவர்களை போராட வைக்கவும், அரசுகளை தன் காலடியில் வீழ்த்தியிருக்கும் சர்வாதிகார கார்ப்பரேட்டுகளின் திமிரை அவர்களுக்கு கைகட்டி சேவகம் செய்கிற ஆட்சியாளர்களை அப்புறப்படுத்தி சமதர்ம சமத்துவ ஜனநாயகத்தை ஏற்படுத்தும் முயற்சியில் இன்றிலிருந்து அடியெடுத்து வைப்போம். நம்முடைய முன்னோடித் தோழர்கள் பெற்றுத்தந்த உரிமைகளை எப்பாடு பட்டேனும் காப்போம் என்ற உறுதியை இந்த அமைப்பு தினத்தில் சூளுரைப்போம். 6.5.2020 அன்று 37ஆம் ஆண்டு அமைப்பு தினத்தில் நாம் நம் கொடிகளையும் பதாகைகளையும் தூக்கி நிறுத்துமுன் இந்த உறுதிமொழிகளை நம்முடைய தோள்களில் வரித்துக்கொள்வோம். இப்போது உயரட்டும் நம் கொடிகளும், பதாகைகளும்.

**- மாநில நிர்வாகிகள்**



## பாராட்டுக்கள்

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் நீதிமன்ற பெஞ்ச் கிளார்க் திருமதி விஜயராணி அவர்கள் ஆசாரிபள்ளம் மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவர்கள் அணிய கொரோனா தடுப்பு உடை தயாரித்து கொடுத்துள்ளார். அன்னாரது பொதுத் தொண்டு சிறக்க பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.



Scanned with CamScanner

# அமைப்பு தினத்தில்...

வெந்ததைத் தின்று
விதிவரின் சாகும் கூட்டமாய்
மிதிபட்ட காலம் ஒன்று

முந்தி முனைமுகத்து நிற்கும்
முற்போக்கு அமைப்பு
முகிழ்த்த மாபெரும் நாள் என்று?

திண்டாடும் ஊழியர்க்கு
கொண்டாடும் நாளெது?

மண்டும் பிற்போக்கு அழுக்ககற்ற
தொண்டுள்ளத்துடன்
யாண்டும் அமைப்பு தோன்றிய நாளது

ஊழியர் நலனில்
சமரசமற்ற போருடன்
சண்டமாருதத்திற்குக்
கங்கனம் கட்டிய நாளது

மே ஆறு
வழமையாய் கிழியும்
தினத்தாளன்று அரசு ஊழியர்க்கு

எண்பத்து நான்கில்
எழுச்சியுடன் துவங்கிய
உடைவாளெனும் அமைப்பவர்க்கு

ஆளும் வர்க்க அடிவருடும்
தலைமையின் கீழ்
அடகு வைக்கப்பட்டிருந்த அமைப்பு

யானை பலமிக்கதாக
ஊழியர்களின் உற்ற தோழனாக
அமைப்பை மாற்ற
தூங்கா நகரில் கருத்து விதைப்பு

அரசு எதுவாக இருப்பினும்
முரசு கொட்டும் உரிமைப் போர்களை
அடக்கும் அடக்குமுறைக் கோலம்

புரிந்ததும் புரிய வைப்பதுமான
பரந்துபட்ட பணியில்
நிறைந்த அர்ப்பணிப்புடன்
களமிறங்கிய காலம்

ஒன்றுபட போராட முன்னேற
நன்று வகுத்த கொள்கைகள்
என்று முயர்த்தும் போர்க்கோலம்

தர்க்கம் நிறைந்ததாய் வேற்றுமை நீங்க
வர்க்க ஒற்றுமைப் பாடம் புகட்டும் ஓங்க

கிளர்ச்சியும் பரப்புரையுமென
தளர்ச்சியிலாது பயணித்த பாதை
நீண்டது நெடியது

முப்பத்தாறு ஆண்டுகளின்
தப்பிலா பாதையில்
சந்தித்த சோதனைகள் கொடியது

தொடுத்த போர்களும்
ஈட்டிய வெற்றிகளும்
காட்டிய படிப்பினைகளும்
அளவிடற்கரிது

அமைப்புக்குள் எழுவன
அமைப்புக்குள் விவாதித்தல்
அமைப்பைச் சரியாக்குதல்
அமைப்பில் சரியாகுதல்
அமைப்புக்கழகு
மற்றவை இழுக்கு

ஊர் இரண்டுபட
கூத்தாடி பாடு கொண்டாட்டமாய்
ஊர் திண்டாட்டமாய்
நேர்நின்றமைதல்
ஓடி முன்னால்
ஈரடி பின்னால்

அரசின் பிரித்தாள் சூழ்ச்சியால்
அமைப்புக்கு வேண்டாம் வீழ்ச்சி
காக்க வேண்டும் எழுச்சி

இதுவரை இல்லாத சோதனை
இப்போது காணும் வேதனை
தப்பாது பற்றுவோம் தொழிற்சங்க போதனை
அமைப்பை உருக்கென உயர்த்தலே சாதனை

- **பெரணமல்லூர் சேகரன்**



Scanned with CamScanner

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின்

## 37வது அமைப்பு தின கொடியேற்று விழா

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 37வது அமைப்பு தினம் 6.5.2020 அன்று அனுசரிக்கப்பட்டது. கொரோனா வைரஸ் தாக்குதல் அதன் காரணமாக அரசு ஊழியர்கள் மீது திணிக்கப்பட்ட பணிப்பளுவுக்கு இடையிலும் அரசின் அறிவிப்புக்கு இணங்க சமூக இடைவெளியை கடைப்பிடித்து அமைப்பு தினம் கொண்டாடப்பட்டது. அதன் ஒரு பகுதியாக...

### மாநில மையம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 37-வது அமைப்பு தினம் மாநில மையத்தில் கொடியேற்றத்துடன் நடைபெற்றது. மாநிலத் தலைவர் மு.அன்பரசு அரசு ஊழியர் சங்கத்தின் கொடியினை ஏற்றிவைத்தார். இந்நிகழ்வில் தென்சென்னை மற்றும் வடசென்னை மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பகுதிக்கு தோழர்கள் கலந்து கொண்டனர்.

### வட சென்னை

**அம்பத்தூர் - ஆவடி பகுதிகுழு:** சென்னை மாநகராட்சி அம்பத்தூர் மண்டல அலுவலக வளாகத்தில் பகுதிகுழு தலைவர் எல்.வேல்பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் ப.சுந்தரம்மாள் கொடியேற்றினார். பகுதி குழு பொருளாளர் வேலு, முன்னணி ஊழியர்கள் பாலமுருகன் மற்றும் குப்புசாமி ஆகியோர் கலந்துகொண்டனர். அம்பத்தூர் தாலுகா அலுவலக வளாகத்தில் பகுதிகுழு பொருளாளர் தலைமையில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் ப.சுந்தரம்மாள் கொடியேற்றினார். முன்னணி ஊழியர்கள் கலந்து கொண்டனர். **சென்னை மாநகராட்சி பகுதி குழு**வில் தலைவர் சீனிவாசலு தலைமையில் நடைபெற்றது. மாவட்ட இணை செயலாளர் சிவகுமார் கொடியேற்றினார். பகுதிகுழு செயலாளர் ரவி மற்றும் முன்னணி ஊழியர்கள் 30 பேர் கலந்துகொண்டனர்.

**தங்கசாலை பகுதிக்குழு:** ஸ்டான்லி மருத்துவ மனைவளாகத்தில் பகுதிகுழு செயலாளர் விவேகானநந்தன் தலைமை தாங்கினார். மூத்த உறுப்பினர் ஆர். சீனிவாசன் கொடியேற்றினார். மாவட்ட இணை செயலாளர் வி. விஜயகுமரன் கலந்துகொண்டு உரை யாற்றினார். முன்னணி ஊழியர்கள் 18 பேர் கலந்து கொண்டனர். மனநலகாப்பகத்தில் பகுதிகுழு தலைவர் தலைமையில் நடைபெற்றது. தலைவர் லட்சுமணன் கொடியேற்றினார். முன்னணி ஊழியர்கள் 10 பேர் கலந்து கொண்டனர். பெரம்பூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் பகுதி செயலாளர் விவேகானந்தன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட இணை மகேந்திரன் கொடியேற்றினார். அரசு மைய அச்சகம் வளாகத்தில் பகுதி குழு இணை செயலாளர் தலைமையில் நடைபெற்றது. பகுதிக்குழு இணை செயலாளர் கிருஷ்ணமூர்த்தி கொடி ஏற்றினார். குழந்தைகள் நல மருத்துவமனை வளாகத்தில் பகுதி இணை செயலாளர் அசோக்குமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் ம.அந்தோணிசாமி கொடியேற்றினார்.

### தென்சென்னை

**டிபிஐ பகுதிக்குழு** அறநிலையத்துறை வளாகத்தில் பகுதிகுழு தலைவர் தலைமையில் நடைபெற்றது. பகுதிக்குழு தலைவர் வே.ராஜா ராமன் கொடியேற்றினார். வணிகவரிதுறை வளாத்தில் பகுதிக்குழு செயலாளர் தலைமையில் நடைபெற்றது. பகுதிகுழு செயலாளர் ரவிராஜ் கொடியேற்றினார். **அண்ணாநகர் பகுதிகுழு** கூட்டுறவுத் துறை அலுவலக வளாகத்தில் முன்னணி ஊழியர் பாலாஜி பிரசாத் கொடியேற்றினார். **கிண்டி - தாம்பரம் பகுதிக்குழு:** தமிழ்நாடு சுகாதார போக்குவரத்து



Scanned with CamScanner

துறை அலுவலக வளாகத்தில் அரசு ஊழியர் சங்கத்தின் முன்னணி ஊழியரும் தமிழ்நாடு சுகாதார போக்குவரத்து துறை ஊழியர் சங்க மாநில துணைத் தலைவருமான லோகிதாசன் கொடியேற்றினார்.

## காஞ்சிபுரம்

**காஞ்சிபுரம்** வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட மைய கட்டிடத்தில் வட்டக்கிளை செயலாளர் சு.ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் வெ.லெனின் சங்க கொடியினை ஏற்றி வைத்தார். மாவட்ட பொருளாளர் வே.குமார், இணைச் செயலாளர் சுமதி வட்டக்கிளை பொருளாளர் குமரேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**திருப்பெரும்புதூர்** வட்டக் கிளை துணைத் தலைவர் ஜெ.தனசேகர் தலமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் துரை.மருதன் சங்கக் கொடியினை ஏற்றி வைத்தார். மாவட்ட இணை செயலாளர் எஸ்.இரஞ்சித்சிங், மற்றும் டி.கண்ணன். எஸ்பாலாஜி ஆகியோர் கலந்து கொண்டனர். அமைப்பு தினத்தை முன்னிட்டு இதே வட்டக்கிளைக்கிளைக்குட்பட்ட தண்டலம் ஊராட்சியில் தூய்மை பணியாளர்களுக்கு மதிய உணவு, முககவசம், கையுறை அரிசி , மளிகை பொருட்கள் வழங்கப்பட்டது.

**குன்றத்தூர்** ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் வி.கோபால் தலைமையில் நடைபெற்றது. சங்க கொடியினை இரஞ்சித்சிங் ஏற்றினார். கால்நடைத் தறை ஆய்வாளர் சங்கம் மாநிலத் தலைவர் தோழர் சண்முகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**வாலாஜாபாத்** வட்டக்கிளை தலைவர் எஸ்.பாலு தலைமையில் நடைபெற்றது. திருப்பெரும்புதுர் வட்டக்கிளை தலைவர் சீதா சீனிவாசன் மற்றும் வி.முத்து சுத்தரம் ஆகியோர் கொடியேற்றினர். மாவட்ட இணை செயலாளர் ஜெயக்குமார் கலந்துகொண்டார். **உத்திரமேரூர்** வட்டகிளையில் மாவட்ட இணை செயலாளர் ஜி.தயாளன் தலைமையில் நடைபெற்றது. ஏ.எஸ். தங்கராஜ் கொடியேற்றினார். பொ.முருகன். ஞ.பாலசுப்பிரமணியன் கலந்து கொண்டனர்

## திருவள்ளூர்

**திருவள்ளூர்** வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட துணைத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. சங்கக்கொடியினை மாவட்டத் துணைத் தலைவர் வெண்ணிலா ஏற்றினார். மாநில செயலாளர் தெ.வாசுகி மற்றும் சங்கத்தின் முன்னணி ஊழியர்கள் 6 பேர் கலந்து கொண்டனர்.

## வேலூர்

வேலூர் அரசு ஊழியர் சங்க அலுவலகத்தில் மாவட்டத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. சங்க கொடியை க.சரவணராஜ் மாவட்டத் தலைவரும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியை ப.ராஜாமணி மாவட்ட துணைத் தலைவரும் ஏற்றினர். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் க. சரவணராஜ் கொடியேற்றினார். **ராணிப்பேட்டை** ஆற்காடு வட்டத்தில் கோ. மோகனமூர்த்தி கொடியேற்றினார்.

## திருவண்ணாமலை

திருவண்ணாமலை சங்க கட்டித்தில் அகில இந்திய அரசு ஊழியர் சம்மேளனத்தின் கொடியை எஸ்.பார்த்திபனும், அரசு ஊழியர் சங்கத்தின் கொடியை ஆர்.ஜோதி சங்கர் ஏற்றிவைத்தனர். வாழ்தாரம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கும் தூய்மை பணியாளர்களுக்கும் கொரானா நிவாரணப் பொருட்கள் காய்கறிகள், மளிகைபொருட்கள், தல 5கிலோ அரிசி உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது.

## கடலூர்

கடலூர் மாவட்ட சங்க அலுவலகத்தில் மாவட்டப் பொருளாளர் தலைமையில் நடைபெற்றது. சம்மேளனத்தின் கொடியை மாவட்ட செயலாளர் எல்.அரிகிருஷ்ணன் மற்றும் அரசு ஊழியர் சங்க கொடியை மாவட்ட பொருளாளர் டி. இரவிச்சந்திரன் ஏற்றிவைத்தனர். இந்நிகழ்ச்சியில் வட்டப்பொருளாளர் ஏ.வேலு மற்றும் வட்ட செயலாளர் வி. கல்யாணசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத் தலைவர் என். காசிநாதன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.



Scanned with CamScanner

## தருமபுரி

மாவட்ட சங்க அலுவலகத்தின் முன்பு மாவட்ட செயலாளர் ஏ.சேகர் கொடியேற்றினார். மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட செயலாளர் ஏ.சேகர் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட பொருளாளர் கே.புகழேந்தி அரசு ஊழியர் சங்கத்தின் கொடியினையும், மாவட்டத் துணைத் தலைவர் மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் பி.எஸ்.இளவேனில் சம்மேளன கொடியினையும் ஏற்றிவைத்தனர். **நல்லம்பள்ளி** வட்டக் கிளையில் மாவட்ட இணை செயலாளர் காவேரி சங்ககொடியேற்றி வைத்தார். **பாப்பிரெட்டிப் பட்டி** வட்டக்கிளையில் வட்டக் கிளை செயலாளர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் வட்டக் கிளை தலைவர் தி.சண்முகம் கொடி யேற்றினார். மாவட்டத் துணைத் தலைவர் அண்ணாகுபேரன் வாழ்த்துரை வழங்கினார். வட்டகிளை பொருளாளர் முனிராஜ் நன்றி கூறினார்.

## கிருஷ்ணகிரி

**ஓசூர்** வட்டக் கிளையில் தொழிற்பயிற்சி நிலையம், பட்டு வளர்ச்சித் துறை அலுவலகம், நெடுஞ்சாலைத்துறை வணிகவரித்துறை ஆகிய அலுவலகங்கள், **கிருஷ்ணகிரி** வட்ட கிளையில் நெடுஞ்சாலைத்துறை அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலகம், **தேன்கனிக்கோட்டை** வட்டக் கிளையில் கெலமங்கலம் வட்டார வளர்ச்சி அலுவலகம் என ஏழு இடங்களில் கொடியேற்றப்பட்டது. இதில் மாவட்ட நிர்வாகிகள் பி.சந்திரன், ஆர்.நடராஜன் வி.தேவராஜ் ஆர்.மஞ்சுளா, சி.கல்யாணசுந்தரம், வட்டக் கிளை நிர்வாகிகள் திம்மராஜ், ஆறுமுகம், மதியழகன், எஸ்.முருகேசன், கே.சீனிவாசன் ஜி.வெங்கடேசன், ஏ.மணி, பெருமாள், நந்தகுமார் மற்றும் முன்னணி ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## சேலம்

சேலம் மாவட்டத்தில் 5 இடங்களில் அமைப்பு தினம் கொடியேற்றப்பட்டது.

## ஈரோடு

**ஈரோடு வட்டக் கிளை**யில் ஐடிஐ அலுவலக வளாகத்தில் வட்டக் கிளைத்தலைவர் பி. கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது. மாநிலத் துணைத் தலைவர் மு. சீனிவாசன் கொடியேற்றி சிறப்புரை நிகழ்த்தினார். அரசு ஊழியர் சங்க அலுவலகத்தில் கிளைச்செயலாளர் ரங்கசாமி தலைமையில் மாவட்ட பொருளாளர் உஷாராணி கொடியேற்றினார்.

## திருப்பூர்

**உடுமலைப்பேட்டை** வட்டக்கிளை சார்பாக வட்டாட்சியர் அலுவலக வளாகம், நீதிமன்ற அலுவலக வளாகம், பொதுப்பணித்துறை அலுவலக வளாகம், நெடுஞ்சாலைத்துறை அலுவலக வளாகம், வட்டார கல்வி அலுவலக வளாகம், அரசு மருத்துவமனை வளாகம், பட்டு வளர்ச்சித்துறை அலுவலக வளாகம், நகராட்சி அலுவலக வளாகம், வட்டார வளர்ச்சி அலுவலக வளாகம், குடிமங்கலம் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகம், பெதப்பம்பட்டி அரசு மருத்துவமனை ஆகிய 13 இடங்களில் அமைப்பு தினம் கொடியேற்றப்பட்டது. **திருப்பூரில்** மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தொழிற்பயிற்சி நிலையம் அலுவலக வளாகம், நெடுஞ்சாலைத்துறை அலுவலக வளாகம் ஆகிய இடங்களில் கொடியேற்றப்பட்டது. **காங்கேயம்** வட்டக்கிளை நெடுஞ்சாலைத்துறை அலுவலக வளாகம் **தாராபுரம்** வட்டக் கிளை சார் வட்டாட்சியர் அலுவலக வளாகம், அரசு மருத்துவனை வளாகம், கால்நடை மருத்துவமனை வளாகம், ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகம், குண்டடம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகம், மூலனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகம், மூலனூர் அரசு மருத்துவமனை வளாகம், நெடுஞ்சாலைத்துறை வளாகம் அகிய 10 இடங்களில் கொடியேற்றப்பட்டது. **மடத்துக்குளம்** வட்டக் கிளை அரசு மருத்துவமனை ஆரம்ப சுகாதார நிலையம் வளாகம், நெடுஞ்சாலைத்துறை அலுவலக வளாகம், ஊரகவளர்ச்சித்துறை அலுவலக வளாகம் ஆகிய 5 இடங்களில் கொடியேற்றப்பட்டது. தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சங்க மாநில பொதுச் செயலாளர் அம்சராஜ், அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் பாலசுப்பிரமணியம், மாவட்ட இணைச்செயலாளர் தி.திலீப், உடுமலை வட்டக் கிளைத் தலைவர் டி.வைரமுத்து, வட்டக் கிளை செயலாளர் கே.வெங்கிடுசாமி, வட்டக் கிளை துணைத் தலைவர்கள் ஆர் சண்முகசுந்தரம், பி.செல்வகுமார், வட்டகிளை இணை செயலாளர்கள் வி.பரமேஸ்வரன்,கே.முத்துசாமி



Scanned with CamScanner

மாவட்ட செயற்குழு உறுப்பினர் மந்திராச்சலம், பழனிசாமி, முருகானந்தம், ஆர்.ஜெகதீஸ்வரன், மற்றும் செயற்குழு ஊறுப்பினர்கள் செல்லமுத்து, எம்.தண்டபாணி, வி.செல்வராஜ், நாகராஜ், ஏ.சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். மாவட்டம் முழுவதும் 35 இடங்களில் கொடியேற்றப்பட்டது.

## கோவை

கோவை வடக்கு வட்டக் கிளையில் கிளைத் தலைவர் இராமசாமி தலைமையில் நடைபெற்றது. வட்டக் கிளைத் தலைவர் பால்ராஜ் கொடியேற்றி சிறப்புரை நிகழ்த்தினார்.

## கரூர்

**கிருஷ்ணராயபுரம்** வட்டக் கிளை அரசு மருத்துவமனை வளாகத்தில் வட்டச் செயலாளர் பழனிசாமி தலைமையில் மாவட்ட துணை செயலாளர் கொடியேற்றினார். மருத்துவர்கள் உள்ளிட்ட மருத்துவ மனை பணியாளர்கள் 20 பேர் மற்றும் பொதுமக்கள் 30 பேர் கலந்துகொண்டனர். **கரூர்** சங்க அலுவலகத்தில் வட்டக்கிளை செயலாளர் அறிவழகன் தலைமையில் சம்மேளனக் கொடியை மாவட்டத் துணைத் தலைவர் எம்.எஸ்.அன்பழகனும், அரசு ஊழியர் சங்க கொடியினை மாவட்ட செயலாளர் சக்திவேலும் ஏற்றினர். **கரூர் -1** வட்டக்கிளையில் வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டச் செயலாளர் பாலசுப்பிரமணியன் தலைமையில் மாவட்ட மகளிர் துணைக்குழு உறுப்பினர் சுமதி கொடியேற்றினார். **பரமத்தி** வட்டக் கிளையில் வட்டக் கிளைத் தலைவர் பழனிக்குமார் தலைமையில் மாவட்ட இணை செயலாளர் இளங்கோ கொடியேற்றினார். **அரவக்குறிச்சி** வட்டக் கிளையில் கிளைத் தலைவர் செல்வகுமார் தலைமையில் கிளைச் செயலாளர் தங்கபாண்டியன் கொடியேற்றினார்.

## பெரம்பலூர்

மாவட்டத் தலைவர் இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் கொடியை மாவட்டத் தலைவர் இளங்கோவன் ஏற்றினார். நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் ப.குமரிஅனந்தன், மாவட்ட பொருளாளர் பெ.ராஜராஜன், மாவட்ட துணைத் தலைவர் வி.கொளஞ்சி, ஸ்டான்லி வட்டார வளர்ச்சி அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பானுமதி, செந்தில்குமார், மாவட்ட நிர்வாகிகள், வட்டக் கிளை நிர்வாகிகள், துறைவாரி சங்க நிர்வாகிகள் மற்றும் அனைத்து துறை ஊழியர்களும் கலந்து கொண்டார்கள்.

## திருச்சி

மன்னார்புரம் பல்துறை வளாகத்தில் மாவட்ட செயலாளர் பழனிசாமி கொடியேற்றினார். மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் மாநில துணைத் தலைவர் பெரியசாமி கொடியேற்றினார். சுகாதார போக்குவரத்து துறை அலுவலக வளாகத்தில் வட்டக்கிளைத் தலைவர் கொடியேற்றினார்.

## திண்டுக்கல்

**பழநி** வட்டக் கிளையில் மாநிலத் துணைத் தலைவர் மங்களபாண்டியன் கொடியேற்றினார் வேடசந்தூர், கொடைக்கானல், நிலக்கோட்டை, திண்டுக்கல் மற்றும் மாவட்ட ஆட்சியரக கிளைகளிலும் கொடியேற்றி அமைப்பு தினம் கொண்டாடப்பட்டது.

## மதுரை

மதுரை சங்க கட்டித்தில் மாவட்டத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் ஜெ. மூர்த்தி கொடியேற்றினார். மாவட்ட இணை செயலாளர் மகேந்திரன் கலந்து கொண்டார். **மதுரை மேற்கு** வட்டக்கிளை பொதுப் பணித்துறை அலுவலக வளாகத்தில் கிளை செயலாளர் ஞானபிரகாகாசம் தலைமையில் நடைபெற்றது. மாநில பொதுச் செயலாளர் அ.செல்வம் கொடியேற்றினார். **உசிலம்பட்டி** வட்டக் கிளையில் கிளை தலைவர் தலைமையில் நடைபெற்றது. கிளை தலைவர் அய்யங்காளை கொடியேற்றினார். கிளை பொருளாளர் மனோகரன் முன்னனி ஊழியர் ஜெயராஜ் கலந்துகொண்டனர். **மதுரை கிழக்கு** வட்டக் கிளை அரசு இராஜி மருத்துவமனை வளாகத்தில் வட்டக்கிளை தலைவர் தலைமையில் நடைபெற்றது. கிளை தலைவர் பாஸ்கரன் கொடியேற்றினார். **மேலூர்** வட்டக் கிளை நிர்வாகி செல்வ குருசாமி தலைமையில் நடைபெற்றது. வட்டக்கிளை செயலாளர் கந்தசாமி கொடியேற்றினார்.

## இராமநாதபுரம்

நெடுஞ்சாலைத்துறை கோட்ட அலுவலக வளாகத்தில் மாவட்ட செயலாளர் பெ.சேகர்



Scanned with CamScanner

ஏற்றிவைத்தார். மாவட்டத் தலைவர் கி.சோம சுந்தர் மாவட்ட பொருளாளர் எஸ்.எஸ்.துரை முன்னாள் மாவட்ட பொருளாளர் சவுந்திரராஜன் மாவட்ட துணைத் தலைவர் நஜிமுதீன், நகர பொருளாளர். இரா.முத்துவழிவிட்டான், மாவட்ட ஆட்சியர் அலுவலக வட்டகிளை செயலாளர் முனீஷ்பிரபு, முதுகுளத்தூர் வட்டக்கிளை செயலாளர் எம்.திருமுருகன், முன்னணி ஊழியர் பி.மாணிக்கவேலு மற்றும் பெண் ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

## நாகப்பட்டினம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டிடம் முன்பு வட்டக் கிளைத் தலைவர் எம்.மேகநாதன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் து.இளவரசன் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியையும், முன்னாள் மாநில துணைத் தலைவர் சு.சிவகுமார் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனக் கொடியையும் ஏற்றிவைத்தனர்.

தமிழ் மாநில உணவு பாதுகாப்பு அலுவலர்கள் சங்க மாநில பொதுச் செயலாளர் அ.தி.அன்பழகன், புள்ளியியல் சார்நிலை அலுவலர் சங்க மாநிலத் தலைவர் ப.அந்துவன் சேரல், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகை வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன், முன்னாள் மாவட்டப் பொருளாளர் எஸ்.இரவிச்சந்திரன், பொறியாளர் சி.பாலசுப்பிரமணியன், ஓய்வூதியர் சங்க வட்டச் செயலாளர் எம்.பி.குணசேகரன் உள்ளிட்ட பல்வேறு சங்கத் தலைவர்கள் பங்கேற்றனர். வட்டப் பொருளாளர் சி.பாலசுப்பிரமணியன் நன்றியுரையாற்றினார்.

## திருவாரூர்

திருவாரூர் வட்டக்கிளை மாவட்ட மைய சங்க கட்டிட வளாகம், இணைப்பதிவாளர் கூட்டுறவுத் துறை அலுவலக வளாகம் நன்னிலம் வட்டக் கிளை வட்டாட்சியர் அலுவலக வளாகம் குடவாசல் வட்டக்கிளை வட்டாட்சியர் அலுவலக வளாகம் மன்னார்குடி வட்டக்கிளை வட்டாட்சியர் அலுவலக வளாகம் நீடாமங்கலம் வட்டக்கிளை வட்டாட்சியர் அலுவலக வளாகம், கொரடாச்சேரி வட்டார வளர்ச்சி அலுவலக வளாகம், திருத்துறைபூண்டி வட்டக் கிளை வட்டாட்சியர் அலுவலக வளாகம், அரசு மருத்துவமனை வளாகம் ஆகிய இங்களில் அமைப்புதினம் கொடியேற்றப்பட்டது.

## தூத்துக்குடி

கோவில்பட்டி வட்டக் கிளையில் கொடியேற்றப்பட்டது. அமைப்பு தினத்தையொட்டி சுகாதாரத்துறை தினக்கூலி பணியாட்களுக்கு நல உதவிகள் வழங்கப்பட்டது. இரத்த தான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த முகாமை மாவட்ட ஆட்சியர் சந்தீப் நந்தூரி தொடங்கி வைத்தார். 50 பேர் இரத்ததானம் செய்தனர்.

## செங்கல்பட்டு

**செய்யூர்** வட்டக் கிளையில் சித்தாமூர் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் வட்டக்கிளை செயலாளர் எம்.ராமு தலைமையில் மாவட்டத் தலைவர் சா.முகதுஉசேன் கொடியேற்றினார். வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் கிளை பொருளாளர் பிரதாப் தலைமையில் மாநில செயற்குழு உறுப்பினர் எம்.வேல்முருகன் கொடியேற்றினார். **மதுராந்தகம்** வட்டக் கிளையில் நகராட்சி அலுவலக வளாகத்தில் கிளை செயலாளர் டி.சிவராஜ் தலைமையில் வட்டத் தலைவர் என்.கிருஷ்ணகுமார் கொடியேற்றினார். வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் வட்டத் தலைவர் கிருஷ்ணகுமார் தலைமையில் கிளை நிர்வாகி சிவராஜ் கொடியேற்றினார். **திருக்கழுக்குன்றம்** வட்டக் கிளையில் கிளை தலைவர் ஏ.சங்கர் தலைமையில் மாவட்ட இணைசெயலாளர் டி.கன்னியப்பன் கொடியேற்றினார். வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் வட்டக்கிளை தலைவர் ஏ.சங்கர் தலைமையில் மாவட்ட துணைத் தலைவர் தலைவர் ஆர். கோவிந்தன் கொடியேற்றினார்.

❖

## கண்ணீர் அஞ்சலி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் ராமநாதபுரம் முன்னாள் மாவட்ட பொருளாளர் மற்றும் கருவூல கணக்குத் துறை சங்கத்தின் முன்னாள் மாநிலத் துணைத் தலைவருமான அன்புத் தோழர் எம்.மகாலிங்கம் 13.4.2020 அன்று இயற்கை எய்தினார். அவரை இழந்து வாடும் அவருடைய குடும்பத்திற்கு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்



Scanned with CamScanner

# அறிவியல்பூர்வமான மருத்துவ பராமரிப்பு

'அறிவை விளக்காக ஏந்திக் கொண்டு எந்த மருத்துவன் நோயாளிகளின் உடலுக்குள் நுழைய தவறுகிறானோ அவனால் வியாதிகளுக்கு அறிவுபூர்வமான சிகிச்சை அளிக்க முடியாது"

- (சரகர் கி.பி. 120-162)

அறிவியல்பூர்வமானது எல்லாமே பகுத்தறிவு உள்ளதுதான். ஆனால் பல சந்தர்ப்பங்களில் மக்கள் அறிவியலையே ஒரு மாயையாக பார்ப்பதை பயன்படுத்திக் கொண்டு அறிவியல் என்ற பெயரில் பகுத்தறிவிற்கு புறம்பான பல பழக்கவழக்கங்களுக்கு ஆட்படுகிறார்கள்.

## அறிவியல் பூர்வமற்ற மருத்துவ பரிந்துரைகள்

மருத்துவ பணியில், பகுத்தறிவிற்குப் புறம்பான நடவடிக்கைகளில் முதன்மையானதும் நன்கு அறியப்பட்டதுமான நடவடிக்கை அறிவியல்பூர்வமற்ற வகையில் மருந்துகளை பரிந்துரைப்பதுதான்.

தவறான, பொருத்தமில்லாத அதிகப்படியான அளவுள்ள, தேவையற்ற, போதுமான அளவற்ற மருந்துகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

1. **தவறான பரிந்துரை:** தவறான மருந்துகளை தந்து நோய்க்கு சிகிச்சை அளிப்பது, அல்லது மருந்தே தேவையில்லாமல் குணப்படுத்தக்கூடிய வியாதிக்கு மருந்து தருவது.

2. **பொருத்தமில்லாத பரிந்துரை:** நோயாளிக்கு பொருந்தாத மருந்துகளை பரிந்துரை செய்வது.

3. **அதிகப்படியான பரிந்துரை:** உண்மையில் ஒரு குறிப்பிட்ட நோயைக் குணப்படுத்த ஒன்றோ அல்லது இரண்டோ மருந்துகள் போதுமானதாக இருந்தாலும் பல வகை மருந்துகளைத் தருவது மேலும் ஒரு மருந்தை தேவையான நாட்களுக்கு மேல் தருவது.

4. **பெருக்கப்பட்ட பரிந்துரை:** ஒரு வியாதியைக் குணப்படுத்த, ஒரே மாதிரியான பலன்களைக் கொடுக்கும் பல மருந்துகளை தருவது.

5. **குறைவான பரிந்துரை:** தேவைப்படும் காலத்தை விட மிகக் குறைந்த கால அளவிற்கோ அல்லது தேவைப்படும் அளவை விட குறைந்த அளவிற்கோ பரிந்துரை செய்வது.

பகுத்தறிவிற்கு புறம்பான நடவடிக்கைகள் இன்று இந்தியாவில் கட்டுக்கடங்காது உள்ளன. இதற்கு பல காரணங்கள் உள்ளன. இன்று இந்தியச் சந்தையில் பல்கிப் பெருகிவரும் பல மருந்துகள் இதற்கு ஒரு காரணம் இவற்றில் பல அறிவியல் பூர்வமற்றது. தேவையற்றதும் ஆகும். விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சினால், இன்று சந்தைக்கு வரும் மருந்துகளின் எண்ணிக்கை மிகப் பெரிய அளவில் உயர்ந்துள்ளது. ஆனால் துரதிருஷ்டவசமாக ஏற்கனவே உள்ள மருந்துகளை விட அதிகமான நல்ல பலன் தரக்கூடிய அளவில் வரும் மருந்துகள் மிகக்குறைவே. இந்திய சந்தையில் சுமார் 80,000 வணிகப் பெயரின்கீழ் மருந்துகள் கிடைக்கின்றன. ஆனால் உலக சுகாதார அமைப்பின் மதிப்பீட்டின் படி 270க்கு சற்று அதிகமான மருந்துகளைக் கொண்டே 95 சதமான உடல் நலப் பிரச்சனைகளை தீர்;த்து விட முடியும்.

இங்கு மதிப்பிடப்பட்டுள்ள பல்வேறு வணிக முத்திரையுடன் வரும் 80,000 மருந்துகளில் பல ஆபத்தானவை: அறிவியல் பூர்வமற்றவை: சிறிதும் பயனற்றவை.

இப்படி ஒரு நிலை உருவானவதற்குப் பிறகும் மருந்துக் கட்டுப்பாட்டு நிர்வாகம் இதில் ஒரு ஒழுங்குக் கட்டுப்பாட்டை கொண்டு வர இயலாத நிலையில் உள்ளது. இந்த நிலைக்கு காரணம் மருந்துக் கம்பெனிகள் என்று சொல்லலாம். ஆனாலும் பகுத்தறிவுக்கு புறம்பான மற்றும் பயனற்ற பல மருந்துகளை அறிவுறுத்தும் மருத்துவர்கள் பலர் உள்ளதால்தான் இது சாத்தியமாகி உள்ளது.

நம்நாட்டில் கிடைக்கக்கூடிய மருந்துகள் பற்றிய ஒரு உண்மையான நடுநிலையோடு கூடிய தகவல்களைத் தரும் அமைப்பு என்பது இல்லை என்பது ஒரு காரணம். சிகிச்சை முறையில் ஏற்பட்டுள்ள வேகமான முன்னேற்றங்கள் பல புதிய மருந்துகளின் அறிமுகம் போன்ற இன்றைய பின்னணியில் மருத்துவர்கள் தங்களின் மருத்துவ அறிவினை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டு தற்காலத்தில் முன்னேற்றத்திற்கேற்ப தயாராய் இருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. இப்படிப்பட்ட மருத்துவருக்கான தொடர்கல்வி ஏற்பாடு என்பது நம் நாட்டில் இல்லை. மேலும் பல மருத்துவர்களுக்கு தங்களின் இடைவிடாத



Scanned with CamScanner

மருத்துவப் பணி காரணமாக, இன்றைய முன்னேற்றங்களை கூறும் மருத்துவ நூல்களைப் படிப்பதற்கு போதிய கால அவகாசம் இருப்பதில்லை. எனவே இன்று பல மருத்துவர்கள் மருந்து உற்பத்தி நிறுவனங்கள் தரும் தகவல்களை மட்டுமே நம்பியுள்ள சூழ்நிலையில் உள்ளனர்.

இப்படிப்பட்ட தகவல்கள் விற்பனைக்கு வந்துள்ள பொருளின் விற்பனையை அதிகரிக்க உதவிடும் வகையில் ஒரு சார்பு நிலையை உடையதாய் உள்ளது. எனவே இந்த நிலைதான் பல தேவையற்ற அறிவியல் பூர்வமற்ற மருந்துகளின் விற்பனைக்கு சாதகமாக உள்ளது.

## இணைப்பு மருந்துகள்

இந்தியச் சந்தையில் மருந்துகளின் எண்ணிக்கை பல்கிப் பெருகி வருவதற்கு ஒரு முக்கியமான காரணம் இணைப்பு மருந்துகளே அதாவது இரண்டும் அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மருந்துகளை ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் கலவையாக்கி ஒரே மாத்திரையாக்கி தருவது. இந்த கலவைகளில் பலவும் அறிவு பூர்வமற்றவையே லாபம் என்ற குறிக்கோளைத் தவிர வேறு எதுவுமில்லை.

## பகுத்தறிவில்லாத பரிந்துரை

அறிவுப்பூர்வமான மருந்தும் ஏன் உயிர்காக்கும் மருந்தும் கூட பகுத்தறிவிற்கு பொருந்தாத வகையில் உபயோகப்படுத்தப்படலாம். தேவையேயில்லாமல் மருந்து சாப்பிடுவது என்பது மிகச் சாதாரணமாகவும் மிக அதிகமாகவும் காணப்படுகிறது. மிக மிகச் சாதாரணமான நோய்களுக்குக் கூட விலைஉயர்ந்த கிருமி எதிர்ப்பு மருந்துகளை சாப்பிடுவதை நாம் பார்க்கிறோம். மேலும் இது தவறான அளவுகளில் பயன்படுத்தப் படுவதையும் காண முடியும் ஒரு சாதாரண நோய்க்கு பல மருந்துகளை மருத்துவர் கூறுவதையும் நாம் பார்க்க முடிகிறது. தாக்கியுள்ள நோய் என்ன என்பதை சரியாக நிர்ணயிக்க முடியாத சூழ்நிலையில் மருத்துவர்கள் அனைத்து சாத்தியங்களுக்குமான மருந்துகளை எழுதித் தந்து விடுகிறார்கள்.

ஒரு சாதாரண ஜுரத்திற்கு வரும் நோயாளிக்கு மலேரியா, டைபாய்டு, போன்ற நோய்களுக்குரிய மருந்துகளைத் தந்து விடுகின்றனர். இதன் மூலம் அந்த நோயாளிக்கு அதிகமான செலவு ஆகிறது என்பதுடன் இப்படிப்பட்ட மருந்துகளால் ஏற்படும் பக்க விளைவுகளையும் அவர் அனுபவிக்க வேண்டியுள்ளது. மேலும் இப்படிப்பட்ட மருத்துவத்தால் நோய் எதிர்ப்பு மருந்து என்பது ஒரு கட்டத்தில் அந்த நோயாளியிடம் வேலை செய்யாது போய்விடும். எப்போது கிருமி எதிர்ப்பு மருந்தின் பணி தேவையோ அப்போது அது செயலற்று போய்விடும் அபாயமும் உள்ளது.

## பகுத்தறிவற்ற முடிவுகளுக்கான காரணங்கள்

**1. மருத்துவ பேஷன்:** சில மருத்துவ பரிசோதனைகள் அல்லது சிகிச்சைகள் போதுமான காரணமில்லை என்றாலும் எல்லோரது விருப்பமாக பரவுகிறது. (உ-ம் எதற்கெடுத்தாலும் ஸ்கேன் எடுப்பது)

**2. லாபத்திற்கான பேராசை:** 1906லேயே பெர்னாட்ஷா 'டாக்டரின் இருதலை நிலை" என்கிற கட்டுரையில் கூறினார். 'மருத்துவரின் மனசாட்சியையும் கௌரவமும் எல்லா மனிதரைப் போன்றததுதானே. ஆனால் வேறு எந்த மனிதரும் தனக்கு அதிக லாப வாய்ப்பு இருந்த போதும் நான் எந்த பாரபட்சமும் இல்லாமல் இன்னொருவரின் நலனை மட்டுமே மனதில் கொண்டு செயல்படுவேன் என உறுதி ஏற்பதில்லை.

**3. விளம்பரமும் ஊழலும்:** பல பகுத்தறிவற்ற செயலுக்கு மருத்துவ தொழிற்சாலைகள் செய்யும் விளம்பரம்தான் ஒரு காரணம். மருத்துவ தொழிற்சாலைகள் அவர்களின் விற்பனையில் மொத்த அளவில் 20 சதவீதம் விளம்பரத்திற்கே செலவழிக்கின்றன.

**4. மருத்துவரின் பரிந்துரையை புரிந்துகொள்ளாதது:** நோயாளிகள் மருத்துவரின் பரிந்துரையை தவறாகவோ அல்லது அரைகுறையாகவோ புரிந்திருக்கலாம்.

கிரேக்க மருத்துவ தந்தை ஹிப்பா கிரட்டீஸ் 'எந்த மாதிரி நோய் ஒரு நபருக்கு இருக்கிறது என்பதை விட எந்த மாதிரி நபருக்கு அந்த நோய் இருக்கிறது என்பதுதான் முக்கியம் வாய்ந்தது என்று கூறியுள்ளார்.அதன்படி ஒரு நோயாளியை முழுமையாக பார்க்க வேண்டும். அவரது கலாச்சாரம், அவரது தனித்தன்மை, அவரது தத்துவம், அவரது அறிவு, அவரது பொருளாதார நிலை இவைகளெல்லாம் இணைத்துத்தான் அவரது பாதிப்பையும் கணக்கிட வேண்டும்.

- **இரா. மங்களபாண்டியன்,**
மாநில துணைத்தலைவர்



Scanned with CamScanner

## இளைஞர்களின் வேலைவாய்ப்பை பறிக்கும் தமிழக அரசின் அரசாணையை திரும்பப் பெற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஆர்ப்பாட்டம்

### வடசென்னை

தங்கசாலை பகுதி குழு சார்பில் அரசு மனநல காப்பகத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் அந்தோணிசாமி விளக்க உரை ஆற்றினார் ஞானசேகர் நன்றி கூறினார்.

### தென் சென்னை

**டிபிஐ பகுதி குழு** இந்து சமய அறநிலைத்துறை அலுவலக வளாகம் மற்றும் வணிக வரித் துறை அலுவலக வளாகத்திலும், **டிஎம்எஸ்** வளாகத்திலும், **சைதை நந்தனம் பகுதி** குழுவில் வேளாண்மை பொறியியல் அலுவலக வளாகத்திலும், **கிண்டி தாம்பரம் பகுதி குழு**வில் சுகாதார போக்குவரத்து துறை அலுவலக வளாகத்திலும், **சேப்பாக்கம்** வளாகத்திலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் மாநில செயலாளர் நம்பிராஜன், மாவட்ட செயலாளர் வினோத்குமார், மாவட்ட தலைவர் டானியல் ஜெய்சிங், மாவட்ட துணைத்தலைவர் ரகுராமன் ஆகியோர் விளக்க உரையாற்றினார். இதில் பகுதி குழு நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### திருச்சி

மாவட்ட மையத்தின் சார்பில் சுகாதார போக்குவரத்து பணிமனை, நெடுஞ்சாலைத் துறை, மன்னார்புரம் பல்துறை வளாக கட்டிடம் அலுவலகங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### நாகை

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் அனைத்து வட்டங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நாகப்பட்டினம் வட்ட மையம் சார்பில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வட்டத் தலைவர் எம்.மேகநாதன் தலைமையில் நடைபெற்றது. வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன், மாவட்டத் தலைவர் து.இளவரசன், ஓய்வூதியர் சங்கத்தின் சொ.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். சம்மேளன தேசிய செயற்குழு உறுப்பினர் அ.தி.அன்பழகன் நிறைவுரையாற்றினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் சி.வாசு, ப.ஜீவானந்தம், ஆர்.முத்துகிருஷ்ணன் வாழ்த்தி பேசினர். வட்டப் பொருளாளர் சி.பாலசுப்பிரமணியன் நன்றியுரையாற்றினார்.

### பெரம்பலூர்

ஆட்சியர் அலுவலகம் முன்பு இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் குமரிஅனந்தன், துணைத் தலைவர்கள் சிவக்குமார், கொளஞ்சி, தணிக்கையாளர் ராஜ்மோகன், சி.சுப்பிரமணியன், மாவட்ட, வட்டக்கிளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர். பொருளாளர் பெ.ராஜராஜன் நன்றி கூறினார்.

### திருவண்ணாமலை

**சேத்துப்பட்டு** ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் கிளை தலைவர் ந.சிவசங்கரன் தலைமையில் நடைபெற்றது. மாநிலப் பொருளாளர் மு.பாஸ்கரன் கண்டன உரை நிகழ்த்தினார். **தி.மலை (தெற்கு)** வட்டக் கிளை சார்பாக வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் கிளை தலைவர் பரிதிமாற்கலைஞன் தலைமையில் நடைபெற்றது. TNROA மாநில துணைத் தலைவர் சு.பார்த்திபன், இரா.ஜோதிசங்கர் கண்டன உரை நிகழ்த்தினார். **செய்யாறு** வட்டக் கிளை அனக்காவூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், **கலசப்பாக்கம்** ஊராட்சி ஒன்றிய அலுவலகம், **கீழ்பென்னாத்தூர்** ஊராட்சி ஒன்றிய அலுவலகம், **செங்கம்** ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகம், **செய்யாறு** ஊராட்சி ஒன்றிய அலுவலகம், **வந்தவாசி** ஊராட்சி ஒன்றிய அலுவலகம், **ஆரணி** ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.மேற்கண்ட நிகழ்வுகளில் மாவட்ட நிர்வாகிகள், வட்டக்கிளை நிர்வாகிகள்,கிளை நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கொரோ சிறப்பிதழ் விரைவில் வெளியிடப்படும். - ஆசிரியர் குழு**

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com



Scanned with CamScanner

# அரசு ஊழியர்கள் மீதான தொடர் தாக்குதலை கண்டித்து
# 8.5.2020 ஆர்ப்பாட்டம் அன்று தமிழகம் முழுவதும் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்



























Scanned with CamScanner

Registered Postal Registration No.TN/CH/(C)/200/2018-2020 WPP.No.TN/PMG(CCR)/
WPP-431-2020 RNI No.68584/81 Posted at Egmore RMS-1 Pathirka Channel
Date of Publication 1st Week of Every Month - Posted on 10.05.2020






Registered Published by M.Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai-600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, [illegible] Street, Ellis Road, Anna Salai, Chennai-600002. Editor: A.SELVAM. Phone: [illegible] E-mail: [illegible]

Scanned with CamScanner